ഉണ്ണിനമ്പൂതിരി 1923-24

വാല്യം 14 ലക്കം 8

JC

R65ma21, N1110.

N24.14.8.

186739

1097

Regd. No. M. 916.

THE VEDANTA DIPIKA
வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷி வரு,
1923—1924.
ஸம்புடம் 14.

வைகாசி மீ.
MAY.
ஸஞ்சிகை 8.



பத்ராதிபர்.
கடாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பீ.ஏ., பீ.எல்.

காரியதர்சி.
ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள்	225
2. கடிதங்கள்.	230
3. ஸ்ரீ விஷ்ணு பக்தி — ஸ்ரீ. உப. வே. என். ரங்காசாரியர்.	235
4. ஸர்வேச்வர காருண்யம் — வங்கீபுரம். ஸ்ரீ. உப. வே. ஸ்ரீராமதேசிகாசார்யர்.	236
5. ச்ராத்தம் — ஸ்ரீ. உப. வே. காடந்தேத்தி. கோபாலாசார்யர்.	238
6. மதப்ரஷ்ட ப்ராயச்சித்தமும், தர்ம சாஸ்த்ரங்களும் — இஞ்சிமேடு. ஸ்ரீ. உப. வே. ரங்கநாதாசார்யர்	1
7. புத்ரஜ்ஞோபாக்யானம்.—	9
8. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.— ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர்.	49

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.



ஜெர்மன்

டிக்-டாக் கடியாரம்

புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

விலை ரூ. 3 தான்.

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

து வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.



லீவர் மூவ்மெண்டு கொண்டு நாள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது. விலை தோலுடன் ரூ. 7—8—0

விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி., தபால்பெட்டி 105, மதராஸ்.

விளம்பரம்.

தீபிகைக்கு 'வ்யாஸங்கள்' சந்தா, விலாஸ மாறுதல்கள், இன்னும் தீபிகை விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விவரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸபையின் கார்யதரிசிக்கு, 2/11 ஆதியப்ப முதலி தெருத்,புரசைவாக்கம், வேப்பேரி போஸ்டு என்ற விலாஸத்துக்கு அனுப்பவேணும்.

வ்யாஸம் எழுதுகிறவர்கள் விஷயத்தை எளிதான தமிழ் நடையில் எழுதிப் பிரமாணங்களைக் கீழ்க்குறிப்புக்களாக எழுதியனுப்பவேணும். ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களுக்கும் வாக்கியங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பு எழுதிவிடவேணும். வ்யாஸங்கள் நேரில் அச்சாபீசுக்கு அனுப்பப்படுவதால் எழுத்துக்களை ஸ்பஷ்டமாகவும் விரளமாகவும் கடுதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

மெம்பர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் விலாஸத்துக்கு ஸஞ்சிகைகள் அப்போதைக்கப்போது வெகு ஜாக்ரதையுடன் அனுப்பப்பட்டு வருகின்றன. ஸஞ்சிகைகள் வேண்டிய அளவு தான் அச்சிடப்படுவதால் தபால் மூலமாகவோ, ஸரியான முகவிலாஸம் இல்லாததினாலோ சேராத ஸஞ்சிகைகளுக்கு நாங்கள் உத்தரவாதமாகமாட்டோமென்று விநயத்துடன் தெரிவிக்கிறோம்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாக இருப்பதாலும் தேவை ஜாஸ்தியாக இருப்பதாலும், வேண்டியவர்கள் தாமதமின்றி எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

கார்யதர்சி.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பீ. ஏ., பீ. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ரக்தாக்ஷி ௵, வைகாசி ௴. [ஸஞ்சிகை 8.

“ [illegible]

[illegible]

ஸ்ரீபாகவதம். 1–9–23.

பத்ராதிபரின் குறிப்புக்கள்.

நமது ஸபாத்யக்ஷரின் பரமபத ப்ராப்தி.

நமது சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபைக்குச் சென்ற இரண்டரை வர்ஷங்களாக அத்யக்ஷராகவும் இருந்து வந்த ராவ்பஹதூர் ஸ்ரீ. உ. வே. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி சில தினங்களுக்கு முன் ஒருவரும் எதிர் பாராத நிலைமையில் திடீரென்று பரம பதமடைந்த விவரம் பத்ரிகைகளின் மூலமாக ஏற்கனவே நமது அபிமானிகளுக்குத் தெரிந்திருக்கும். இந்த ஸ்வாமி நமது ஸபையின் ஆரம்பம் முதல் அதன் அங்கத்தினராயும், நெடுங் காலம் அத்யக்ஷ ப்ரதிநிதிகளில் (Vice President) ஒருவராயும், சென்ற இரண்டு வர்ஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் ஸபாத்யக்ஷராகவும் (President) இருந்துவந்து நமது ஸபையின் அபிவ்ருத்தியில் ஈடுபட்டு வந்திருப்பவர். சென்ற ராக்ஷஸ௵ மார்கழி௴ (1915௵ டிசம்பர்௴) த்தில் திருவெவ்வுளூரில் நடந்த நமது ஸபையின் ஐந்தாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் இந்த ஸ்வாமி அக்ராஸநம் வஹித்து அதன் நடவடிக்கைகளை வெகு விமர்சை

186739

யாக நடத்தினர். அந்த மஹாஸங்கத்தில்தான் 'ஸ்ரீஅஹோபிலமட சிஷ்ய ஸபை' யானது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாக மாறினது. இவர் உத்யோகத்திலிருந்தபோதும், சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜு பதவியிலிருந்து பென்ஷன் பெற்ற பிறகும், ஸம்ப்ரதாய அபிமானத்திலும் ஆசாராநுஷ்டானங்களிலும் குறைவற்றிருந்தவர்; நமது தர்சனத்தில் பூர்ணமான ஜ்ஞாநத்தை ஸம்பாதித்தவர்; லௌகிகப் பதவியும் வைதிகஸ்ரீயும் சேர்ந்தால் 'பொன்னுமாய் நாறுமாப்போலே' என்று நம்பூர்வர்களநுஸந்தித்த கணக்கில் அதுவே உயர்ந்த பேறாக விளங்குமென்பதைத் தமது ஜீவகாலத்தில் நன்றாய் உதாஹரித்துக் காட்டிவிட்டார். வைதிக தர்மாநுஷ்டானத்தையும் ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தையும் சிறுவர்களுக்கு ஆரம்பத்திலேயே படியும்படி உபகரிக்கக்கூடிய பல வித்யாசாலைகள் ஸதாசார்யர்களுடைய மேற்பார்வைகளுக்குக் கீழ் ஏற்படவேண்டுமென்று இந்த ஸ்வாமிக்கு விசேஷமான அபிஸந்தியுண்டு. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேரெழுந்தூர் ஸ்வாமியின் ஆச்ரமத்தில் இத்தகைய பாடசாலையொன்று நடப்பதற்கு இவருடைய ப்ரயத்நங்கள் மிகவும் உதவின.

ஏற்கனவே அநேக ப்ரமுகர்களையும் வித்வான்களையும் இழந்த நமது ஸமூஹத்துக்கும் நமது ஸபைக்கும் இந்த ஸ்வாமியின் நிர்யாணம் அத்யந்தம் வ்யஸநகரமானதென்பதைச் சொல்லவேண்டுவதில்லை. அவருடைய குமாரர்களுக்கு நமது ஹார்த்தமான அநுசோசநத்தை இதனால் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

தீபிகையின் வசந நடை.

இதைப்பற்றி நமது நண்பர்கள் சிற்சில ஸமயங்களில் கூறிவந்திருக்கும் அபிப்பிராயங்களுக்கு ஸமாதானங்களை நாமும் அப்போதைக் கப்போது வெளியிட்டு வந்திருக்கின்றோம். ஆகலால் இவ்விஷயத்தில் புதியதொன்றுமில்லை எனினும், புதிதாக எழுதுவோரின் த்ருப்திக்காகத் தற்போதும் தற்போதும் சிறிது சொல்லவேண்டியிருக்கிறது.

நமது அந்தரங்க அபிமானிகளிலொருவராகிய திருவண்ணாமலை வைத்தியம் ஸ்ரீமான் வெங்கடாசல முதலியாரவர்கள் நமக்கெழுதியிருக்கும் நீண்டதோர் கடிதத்தில்,

'சீரும் சிறப்பும் மலிந்து விளங்கிய தமிழ் நாட்டில் கால மாறுபாட்டாலும் ஸமயாசாரியர்களின் மன வேறுபாட்டாலும் சமய ஒழுக்க நெறி குன்றி ஆஸ்திக்யம் மறைந்து, நாஸ்திக்யம் சிறந்து, ஜாதி சமய ஒழுக்க வழக்கங்கள் சிதைந்து, ச்ருதி உபநிடத ஸ்ம்ருதி புராண இதிஹாஸங்கள் யாவும் சுயநலங்கருதிய கற்பனைக் கவித்திரங்கள் எனக் [illegible]வரும் இந்நாளில், சமய ஞாநத்தையும், ஸமூக ஒற்றுமையையும் முன்னுளிலிருந்த நன்னிலைக்குக் கொண்டுவர அரிய முயற்சி செய்து பொதுவாய்த் தமிழுலகுக்கும் சிறப்பாய் வைணவ ஸமூகத்திற்கும் பேருபகாரம் புரிந்து வரும்'

நமது தீபிகையின் ப்ருவ்ருத்திகளைக் குறிப்பிட்டுப் பின்னர், அது நமது ஸமூஹத்துக்குப் 'போதுமான பயன் அளிக்கவில்லை' யென்றும், அதற்குக் காரணம், தமிழ் நாட்டினர் எல்லோரும்,

'சமய சாஸ்த்ரங்களை அறிந்து அவ்வழியில் நடந்து ஸதாசாரசீலர்களாய் விளங்குவதற்காக வெளிவரும் இப்பத்திரிகை அவர்களுக்குத் தெரியாத மொழியில் புரியாத கடின நடையில் அர்த்தமாகாத சொற்கோர்வையில் ப்ரசுரிக்கப்படுவதே'

என்றுபலர் எண்ணுவதாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது 'வடமொழி எழுத்துக்களும், வடமொழி பதப்ரயோகங்களும், வடமொழி சொற்றொடர்களும்' தீபிகையில் நிரம்பவிருப்பதால் வடமொழி தெரியாதவர்களுக்கு அது ப்ரயோஜநப் படுகிறதில்லை யென்று. எனவே தீபிகை 'தமிழ் நாடு முழுவதும் (க்ராமங்களில் முக்கியமாகவும்) பரவுவதற்கு' இதன் வ்யாஸங்கள் முதலிய யாவும் 'தனித் தமிழிலேயே எழுதப்படவேண்டு' மென்று சொல்லி, அதற்கு த்ருஷ்டாந்தமாக வடமொழிப் பதங்கள் அவசியமாக வரவேண்டிய விடங்களில் அவைகளை வடமொழியிலும் (ஓங்காரோ பகவான் விஷ்ணு:) என்று தமிழ் எழுத்தாலும் எழுதிப் பின் ஓங்காரத்துக்கு பிரதிபாத்யன் விஷ்ணு ஒருவனே' என்று விளக்கி வரலாமென்று காட்டுகிறார்.

'ஆங்கிலத்தில் காட்டும் (158, 159) என்ற பக்க எண்களையும் இதுபோன்ற இதர எண்களையும் (கருஅ, கருகூ) என மாற்றிவிடலாம்'

என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

'தீபிகையின் மீதுள்ள பற்றுதலாலும், சமய ஒற்றுமையை நாடி வைணவ ஸமூகம் முழுவதும் ஒரே குடும்பம்போல் ஐக்யமாய் ஒன்று சேர்ந்து எதிர்கால நன்மையைத் தேடி முன்னேறுவதற்குத் தீபிகையின் அபிவ்ருத்தி அத்யாவச்யமாயிருப்பதை நினைத்தும்' முதலியாரவர்கள் பரிவுடன் இக்கடிதத்தை எழுதியதற்கு நாமும் நன்றி பாராட்டுகின்றோம்.

நமது நேயர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுவதொன்றுண்டு. அதாவது ஏனைய மதங்களைப் போலன்றியே ஸ்ரீ வைஷ்ணவ மதம் முழு வைதிக மதம் என்பதே. ஆதலால் இச்சமயக் கொள்கைகளனைத்தும் வடமொழியிலுள்ள வேத உபநிஷத்துக்களிலும் அவற்றை யடியொத்தி அவற்றை விவரிக்கும் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள் முதலியவைகளிலுமே காணப்படுமவையாயிருக்கின்றன. இவைகளையே பின்பற்றி ஆழ்வார்கள் அருளிச்செய்துள்ள இவ்

யப்ரபந்தங்கள் வைணவரல்லாத வெறுந்தமிழ் வல்லவர்களுக்கு அறிவு நிலமாவதில்லை யென்பதும் ப்ரஸித்தம். அப்பிரபந்தங்களுக்கு உரைகளும் வடமொழி வல்ல பூர்வாசார்யர்களாலேயே இயற்றப்பட்டுள்ளவை. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் மூல தனமாகிய ரஹஸ்யத்ரயங்களும் அவைகளின் உரைகளாகிய ரஹஸ்ய க்ரந்தங்களும் அத்தகையவைகளாகவே உள. இக்கொள்கைகளை ஓர் படியில் சீர் குறையாமலும், ஓர் படியில் எல்லோரும் ஸாதாரணமாய் அறியும்படியாயும் உபதேசிக்கத் தமிழ் வழக்கில் வெகுவாய்ப் பரவியிருக்கும் சில ஸம்ஸ்க்ருத பதங்களும் ஒருவர்க்கும் புரியாத கடினமான இலக்கணத் தமிழன்றியே ஸாமான்யமாய்ப் பேசப்படும் தமிழும் கூடியதுமான மணிப்ரவாள நடையே மிகுந்த ப்ரயோஜனத்தை யளிக்கவல்லதென்று திருக்குருகைப்பிரான் பிள்ளான் துடக்கமான நமது முன்னோர்கள் கண்டார்கள். ஜைநமத க்ரந்தங்களில் முக்கியமானவை பல இம்மணிப்ரவாள நடையிலேயே யிருக்கின்றன! தமிழ்நாட்டிலுள்ள மற்ற மதங்களொன்றுக்கும் இந்தபலம் கிடையாது. இந்நடையில் நமது ஸமய நூல்களிருப்பதால் ஸ்ரீவைஷ்ணவ மதத்துக்குக்கேற்பட்டிருக்கும் தனி வன்மையைப்பார்த்துப் பிறர் பொறாமைப் படுவதையும் அறிவோம். கால ஒழுகினால் நாட்டில் ஸ்வதேச பாஷைகளின் பயிற்சியும் பழக்கமும் ஸ்வமதாபிமானமும் படிப்படியாகக் குறைவடைந்து வந்து விட்டன. இவ்வித ஸந்தர்ப்பங்களைக் கவனித்தே நமது தீபிகையின் ப்ரவர்த்தகர்கள் முழுவைதிகமெனப் பெருமைவாய்ந்த நமது ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் கொள்கைகளைப் பரவச்செய்ய நமக்கே உரியதாய் நமது மத அபிப்ராயங்களை மிகுதி குறைவறச் செவ்வனே விளக்கவல்ல இம்மணிப்ரவாள நடையைத் தற்காலத்துக்குரிய வண்ணம் சிறிது மாறுபாடுகளுடனமைத்துப் பரவச் செய்வதை தீபிகையின் முக்கிய கைங்கர்யங்களிலொன்றாகக் கொண்டார்கள். இதில் உபயோகிக்கப்படுவன தமிழ் எழுத்துக்களே. பதங்களை ஸ்வரூபங்கெடாமல் எழுதுவதற்கு இன்றியமையாத சில க்ரந்த எழுத்துக்கள் மட்டுமே சிலவிடங்களில் வழங்கப்படுகின்றன. க்ரந்த எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்கள் தான். மலையாள லிபிகளைக்கவனித்தால் இது விளங்கும். கணிதம், ஜோதிடம் முதலிய சாஸ்திரங்களையறிய, அவற்றிற்குரித்தான பரிபாஷைகளையும் அடிப்படையான சில கோட்பாடுகளையும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகிறதுபோல நமது வேதாந்த சாஸ்த்ரத்தில் ப்ரவேசிப்பவர்களும் அதற்குவேண்டிய சில பரிபாஷைகளையும் அஸ்திவாரக்கொள்கைகளையும் கொஞ்சம் சிரமப்பட்டாவது தெரிந்துகொள்ளவேண்டும். ஸமயாசாரங்களில் பழக்கமுடையவர்களுக்குக் கல்விப்பயற்சி அதிகமாக வில்லாமலிருப்பினும், தீபிகையின் விஷயங்கள் ஸாதாரணமாக அர்த்தமாகும். ஆதலால் இவை சிலர்க்குப்புரிவதில்லை யென்பதற்குக் காரணம் அவர்களுக்கு ஸம்ப்ரதாயத்தில் ஊற்றங்குறைவானதுபற்றியேயன்றி வடமொழி

எழுத்துக்களினாலாவது சில வட சொற்கள் உபயோகிக்கப்படுவதினாலாவதன்று. தீபிகையின் அநுபவத்தில், அதன் நடையைப்பற்றிக் குறை கூறினவர்களில் பலர் பின்னர் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டதைக் கண்டதுண்டு.

மணிப்ரவாளநடையைத் தெரிந்துகொள்வது ப்ரயாஸமானதல்ல. அதற்காக ஸம்ஸ்க்ருதபாஷையைக் கற்கவேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லை. சிறிது காலப்பழக்கத்தினாலேயே அதை எவரும் எளிதில் தெரிந்துகொண்டு விடலாம். கொஞ்சம் பழகிவிட்டால் அதின் விசேஷம் தானே மனதுக்கு இன்பத்தைக்கொடுக்கும். நமது ப்ரயத்தினம் கொஞ்சங்கூட இல்லாமல் சாஸ்த்ரம் புரியவில்லையென்று குறை கூறுவது ஸரியா? பிறவிக்குருடனுக்குப் பாலின் வெண்மையையுணர்த்த அவனைக் கொக்கைத் தடவிப்பார்க்கும்படி செய்த மாதிரியன்றோ, ஸம்ப்ரதாயத்தில் ப்ரவேசமில்லாதவருக்கு வெறும் தமிழின் உதவியைக்கொண்டு வேதாந்தத்தைப்போதிக்கத் துவக்குவதிருக்கும்! நமது நண்பர் முதலியாரவர்கள் கடிதத்திலிருந்து நாம் ஸங்க்ரஹித்திருக்கும் வாக்யங்களினாலேயே நாம் சொல்லுவதின் உண்மை விளங்கும். 'ஓங்காரத்திற்கு பிரதிபாத்யன்' என்று இவர்காட்டிய உதாரணம் வடமொழியன்றோ? ஸம்ப்ரதாயமறியாதார்க்கு இது புரியுமோ? தமிழ் எழுத்தினால் மட்டும் வடசொல் தமிழாய் இப்படி சாஸ்த்ர அர்த்தங்களை விளக்கத் தீராதவிடங்களில் தான் தீபிகையும் இத்தகைய வசநங்களை உபயோகிப்பது! பின்னையும் ப்ரதிபாத்யன் என்பதற்குப் பதிலாக 'ஓங்காரத்தினால் சொல்லப்படுகிறவன்' என்று அர்த்தமும் சில விடங்களில் எழுதப்பட்டு வருவதைத் தீபிகை நேயர்களறிவார்கள்.

தமிழில் விசேஷ அபிமானம் பாராட்டுவதாய் ப்ரமித்து வடசொற்களையொடித்து விகாரப்படுத்துவது ஒரு பயனையும் அளிப்பதில்லை. ஸுஷுப்தி என்பதற்குச் சுளுத்தி என்றும், அஹம்க்ரஹ உபாஸனை என்பதற்கு ஆங்கார உபாஸனையென்றும் அகங்கார உபாஸனையென்றும் தமிழபிமானிகளால் அச்சிடப்பட்டுமுள்ளவைகளை யாமறிவோம். இப்படிப் பலவுண்டு. இப்படிச்செய்வது பதங்களை அழிப்பதுமட்டுமல்லாமல் நேர்விரோதமான அர்த்தங்களையும் தந்துவிடுகின்றது. இதைவிட வடசொல்லை உள்ளபடி எழுதி உச்சரிப்பது மேலானதன்றோ?

நமது நாட்டிற்பிறந்தவரெவரும் ஸம்ஸ்க்ருத பாஷையைத் தம்முடையதல்லவென்றாவது தமிழுக்குப் புறம்பானதென்றாவது ப்ராம்மணர்க்கு மட்டுமுரித்தானதென்றாவது நினைக்கக்கூடாது. அந்தபாஷையினால் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள வேதாந்த சாஸ்திரமாகிற நிதியில் தமக்குள்ள குறை எக்காரணத்தினாலாவது இழக்கப்பார்ப்பது புத்திசாலித்தனமாகாது. மற்றவரைக்

காட்டிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அதில் பாத்தியம் அதிகமென்பது நமது துணிவு !

இவ்வளவு தூரம் எழுதியதால், தீபிகையின் வசந நடையில் ஒருவிதமான குறைவுமில்லையென்று நாம் சொல்லத்துணிந்தோமல்லோம். ஸம்ஸ்க்ருத வித்யையை ரக்ஷிப்பவர்களென்று சொல்லப்பட்ட ப்ராம்மணர்களிலேயே அதின் பரிசயம் மிகவும் குன்றிக் கிடப்பதையும், நமது நண்பர் எழுதியிருக்கிறவண்ணம் இக்காலத்தவர் 'ஆங்கிலமறியாத பெற்றோரிடத்திலும் பந்துக்களிடத்திலும் பேசும்போதெல்லாம் நான்கு வார்த்தைகளில் மூன்று ஆங்கில வார்தைகளைக் கலந்து' பேசுவதையும், ஆங்கிலப் பயிற்சியினுற் கற்ற நினைவுகளை யநுஸரித்துச் சொன்னாலன்றி அவர்கள் ஒரு விஷயத்தையும் அறிந்து கொள்ள முடியாதவர்களாய் நமது பாஷையின் மீது குறையைமட்டும் சொல்லுகிறவர்களாய் இருப்பதையும், கவனித்துத் தீபிகை எங்கும் பரவவேண்டி ஆவச்ய கதையையும் மறவாமல், அது பஹு ஜநங்களுடைய அபிமானத்துக்குப் பாத்திரமாகும்படி, அதன் ப்ரதான நோக்கங்களுக்கு விரோதமின்றியே, ஸாத்தியப்பட்ட வரையில் அதன் வசந நடை ஸாமான்ய எல்லோரும் அறியும்படி பரிஷ்காரம் செய்யப்படுகிறதென்பதை நமது அபிமானிகள் அறியவேண்டியது கடமை. தீபிகையானது ஸாதாரண ஸமாசாரப் பத்திரிகைகள் முதலியவற்றைப் போன்றதன்று. சாஸ்த்ர ஸம்பந்தமான வ்யாஸங்களும் குறிப்புகளுமே அதில் வருகின்றன. அவற்றைப் பெரும்பாலும் வடமொழியில் மட்டும் பயின்ற பண்டிதர்களே எழுதவேண்டியிருக்கிறது. அச்சுக்குப் போகுமுன் அவைகள் தீபிகையின் நடையில் வெகுவாய்த் திரும்ப எழுதப்படுகின்றனவே யாகிலும், சில ஸமயங்களில் வடசொற்களும் சொற்றொடர்களும் நிவர்த்திக்கமுடியாமல் நின்றுவிடுகின்றன. ஸ்ரீ வைஷ்ணவ மதாபிமானிகள் இதை ஒரு குறைவாக நினைக்கக்கூடாது. ஸம்ப்ரதாயப் பழக்கமுள்ளவர்களுக்கு அவை புரியக்கூடாதவைகளுமல்ல. தீபிகைக்கு இப்போது பதினான்காவது ஆண்டு நடக்கிறதே யாகிலும், இன்னமும் இதை பகவத் கைங்கர்யமாகவே நினைத்து அத்யாவச்யமான சிப்பந்திகளின் உதவிகூட இல்லாமல் கேவல அபிமான கார்யமாகத்தான் நடத்தவேண்டியிருக்கிறது. பகவத் க்ருபையாலும் நண்பர்களின் ஸகாயத்தாலும் இதற்குச் சந்தாதாரர்கள் அதிகரித்துப் பத்திரிகை ஸ்தாபநத்துக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் சீக்கிரத்தில் கிடைக்குமேயானால், எவ்விதக் குறைவும் தோன்றாதபடி நமது பத்திரிகை நடந்து வருமென்பது நிச்சயம்.

கடிதங்கள்.

ஸ்ரீஆராவமுதன் ப்ரும்மோத்ஸவ வேதபாராயண ஸம்மேளனம்.

19-4-24-ல் திருக்குடந்தை பாட்டாசார்யர் தெருவில் ஷடி உத்ஸவத்தில் வேதபாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. அப்போது ப்ரோபெஸர் ப்ரும்மஸ்ரீ சுந்தரராமய்யரவர்கள் அக்ராஸநம் வகித்தார். ஸப்ஜட்ஜு ஸ்ரீ. உ. வே. வி. பாஷ்யம் அய்யங்காரும் ப்ரும்மஸ்ரீ கெ. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும், ஸ்ரீ. உ. வே. ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களும், ப்ரும்மஸ்ரீ அப்புசாஸ்திரிகள் முதலிய இன்னும் சில ப்ரபுக்களும் விஜயம் செய்தார்கள். அவர்களால் சொல்லப்பட்ட சில வார்த்தைகளின் ஸாராம்சங்கள் இங்கு ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

ஸ்ரீ. உ. வே. வி. பாஷ்யமய்யங்கார்:—'லௌகிகத்தால் சிலர் உன்னத பதவியையடைந்து அனேக உத்யோக ஆடம்பரங்களுடனிருப்பதைப் பார்த்து ஸ்வல்ப வருமானமுள்ளவர்களும், சிரமமான குடும்பயோகக்ஷேமத்தையுடையவர்களும் பிரமிக்காமல் இவைகளெல்லாம் நச்வரமான புருஷார்த்தமென நினைத்து வேதாப்யாஸம் என்று ப்ராம்மணர்களுக்கு பரம்பரையாய்க்கிடைத்த மூலதனத்தை வீணாக்காமல் அதிலேயே சிரமப்பட்டு வருவார்களேயானால் ப்ராம்மண்யம் இன்னும் அபிவ்ருத்தியடைந்துவரும். தற்காலம் பாஷாந்தரம் வாசிப்பதினால் ஒருவிதமான ப்ரயோஜநமுமில்லை. தவிரவும் கோர்ட்டு முதலான இடங்களில் 100, 200 ரூபாய் சம்பளத்திலிருக்கிறவர்கள் வேலையைவிட்டு நீங்கினால் பிழைக்க ஒரு மார்க்கமும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். நம்மை பாஷாந்திரப் படிப்பு அவ்விதமாக்கிவிட்டது. இதையோசிக்கவேண்டும்'.

ப்ரும்மஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்:—'ஸ்ரீபாகவதத்தில் சொல்லியபடி பகவத் பக்தர்கள் சேர்ந்திருக்கும்படியான கோஷ்டிகளில் பரிபூர்ண பக்தி எனக்கு எந்த ஜந்மத்திலும் வேண்டும். இந்த மாதிரி பகவத்கோஷ்டியை காஞ்சீபுரம் முதலிய இரண்டொரு திவ்யதேசங்களில்தான் பார்க்கமுடியும். இந்தக் காலத்தில் வேதாப்யாஸம் என்கிறது ரொம்பவும் குலைந்துபோய்விட்டது. அது காரணமாக அனேகவிதமான ஸங்கடங்கள் ஏற்பட்டுவிட்டன. அந்த தோஷமும் ஆலஸ்யமும் ஆசாரமில்லாமையும் வேதாப்யாஸத்தை விடுவதும் ப்ராம்மண ஸமூஹத்தின் ம்ருத்யுவுக்குக் காரணம்,

'அநப்யாஸேந வேதாநாம் ஆசாரஸ்ய ச வர்ஜநாத் ।
ஆலஸ்யாத் அந்நதோஷாச்ச ம்ருத்யுர் விப்ராந் ஜிகாம்ஸதி ॥'

ஸ்ரீ.உ. வே. என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்:—'ஞாபகத்திலிருந்து ஒன்றும் சொல்லக்கூடாது. எல்லாம் ஸ்வதந்த்ரமாய் அப்போதைக்கப்போது புத்திக்கு விஷயமாக வேண்டும்' என்று தத்காலத்தில் நினைக்கிறார்கள். இங்கிலீஷ் பாஷையின் போதனா முறையினால் ஸ்கூல் பையன்களுக்கு அநேகமாய் புஸ்தகம், நோட்புக், 5 - விதத்தில் பென்சில்கள், இவைகளையும் வைத்துக்கொண்டாலும் 4-வாக்யங்களைச்சொல்லத்தெரியாது. நான் ஆரம்பத்தில் ஸர். வி. பாஷ்யமய்யங்காரவர்களிடம் நெருங்கிப் பழகினகாலத்தில் அவர்கள் தன் கையினால் ஒருவிதமான குறிப்புகளும் குறிக்கிறதில்லை. தற்காலத்திலோவென்றால் வக்கீல்கள் கடுதாசிகளில் நோட்ஸ் என்று எழுதிக்கொண்டு வருகிறார்கள். அதில் ஏதாவது ஒரு கடுதாசி தவறிப்போனால் அப்பொழுது அநர்த்தம்தான்.

இந்த மாதிரி வழிக்கெல்லாம் இடங்கொடுக்காமல் நம் பூர்வர்கள் பால்யமான வயதிலேயே வேதாப்யாஸத்தில் சிறுவர்களைப் போட்டுவிடுகிறார்கள். அப்படி செய்வதினால் வாக்கு சுத்தமாகிறது. தெரியவேண்டிய விஷயங்கள் புஸ்தகம் பாராமலே தெரிந்துவிடுகின்றன. வேதம் என்பது புஸ்தகத்தைப்பார்த்து எவ்வளவு நாள் பாடம் பண்ணினாலும் மனதுக்கு வாராது. வெட்கத்தைவிட்டு வாயால் காம்பீர்யமாய்ச்சொல்லிக்கொண்டு மற்றவரைக் கேட்டே தெரிந்துகொள்ளவேண்டும். பத்து லக்ஷம் ஜனங்களில் இரண்டொருவர் தான் மந்திரி முதலான உன்னதபதவிகளுக்கு வரமுடியும். அவர்களைப் பார்த்து பாக்கிஜனங்கள் தங்களுடைய பித்ரார்ஜ்ஜித சொத்தையெல்லாமிழந்து வேதத்தைக்கைவிட்டு இங்கிலீஷ் பாஷையைப் படிப்பதில் அதிகப்ரயோஜனமில்லை. அந்தப்படிப்புக்கு த்ரவ்யம் செலவழிக்க சக்தியுள்ளவர்கள் செலவழிக்கட்டும். ஸாமாந்ய ஜனங்கள் அவர்களைப்பார்த்து தங்களுடைய ஸ்திதிதெரியாமல் ஏராளமான பொருளை இப்படிப்பிற்கு செலவுசெய்யக்கூடாது. புது ஆலயங்களைக்கட்டி ப்ரதிஷ்டைச் செய்வதைப்பார்க்கிலும் இருக்கிற ஆலயங்களைச் சீர்மையாய்க் காப்பாற்றுவது எவ்வளவு சிலாக்கியமோ அப்படியே புதுப்பாடசாலை வைப்பதைக்காட்டிலும் இருக்கிற பாடசாலைகளைக் கவனித்து நன்றாய் வைத்துக்கொள்வது உத்தமம்.'

ப்ரும்மஸ்ரீ ப்ரோபெஸர் ஸுந்தரராமய்யர்:— 'லௌகிகர்களெல்லாம் தாங்கள் வைதிகர்களைக்காட்டிலும் வேறு ஜாதியென்றே நினைக்கிறார்கள். ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் வந்தவுடன் தம் கௌரவத்தையே பெரிதாக எண்ணுகிறார்கள். பணத்தில் மிகவும் ஆசையுடையவர்களாகிறார்கள். ஒவ்வொரு வக்கீலும் ஒரு காலத்தில் தனக்கு ஹைகோர்ட்டு ஜட்ஜு பதவி கிடைக்குமென்று எண்ணம் கொள்ளுகிறார். எவ்வளவு வந்தாலும் ஜனங்களுக்கு திருப்தியில்லை. வர்ஜ்யாவர்ஜ்யமில்லாமல் ஒரு தினத்திற்கு 5—6 தடவை ஆகாரத்தை உட்கொண்டு நம்மவர்கள் அல்பாயுஸிலேயே மரணத்தை யடைந்துவிடுகிறார்கள். ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்னும் ஒரு மஹான் இருந்தார். அவர் "தனக்கு எங்கேயாகிலும் வழியில் சிந்தின நெல் கொஞ்சம் புசியை தணிக்கக் கிடைக்குமென்றும், தாகத்துக்கு ஆற்றுநீர் போதுமென்றும், ஆகையால் தனக்கு எந்த ராஜாவினுடைய தயவும் வேண்டியதில்லை' யென்றார், 'தானாவது தன் பிதாவாவது ஸம்பாதித்த த்ரவ்யம் ஒன்றும் கிடையாதென்றும், பகவானே தனக்குப் பரமமான தநம்' என்றும் நினைத்து தேகத்தில் கொஞ்சங்கூட வாட்டமில்லாமல் பரோபகாரமாகவே அநேகம் கிரந்தங்கள் எழுதி காலத்தை கழித்தார் என்று தெரிகிறது. கொஞ்ச காலத்துக்கு முன் இந்த ஊரில் சடகோபாசார்யர் என்கிற வித்வான் (தன்னுடைய சம்பளம் 20 ரு.) 1000 ரு. சம்பளம் வாங்கி இவருக்குமேலதிகாரியாயுமிருந்துவந்த ராவ்பஹதூர் கோபால ராயரவர்களிடம் சொன்னதாவது "என்னிடத்தில் வந்து எவராகிலும், யுக்தியாலாவது, சாஸ்திரத்தாலாவது, தான் சொல்வது மெய்யென்று ஸ்தாபித்துவிட்டு போகிறது என்பது முடியாது. அந்த வார்த்தை இவ்விடத்துக்கும்தான்" என்று. இப்படியே நமது பெரியோர்கள் மனோபாவம்.

தேசாந்தரங்களில் நாளுக்குநாள் கஷ்டம் அதிகரித்துக்கொண்டு வருகையில் சில தெரிந்தவர்கள் 'நமது தேசங்களில் இப்படிக் கஷ்டம் அதிகரிக்கிறது. இந்தியாவில் மாத்திரம் ப்ராம்மணர் என்ற ஒரு ஜாதியார் 4000-வருஷ காலமாய் தங்கள் சீர்

குலையாமல் ஜீவித்து வருகிறார்களே' என்று ஆச்சரியமும் வருத்தமும் அடைகிறார்கள். இதுக்குக் காரணம் என்னவென்றால் நாம் வேதத்தைப் பின்பற்றி, அதின் ஆசாரங்களை கைவிடாததுதான். ஆர்யஸமாஜ், ப்ராம்மஸமாஜ் என்கிற ஸமூஹங்களெல்லாம், வர்ணாச்ரம தர்மத்தை ஒழிக்கிறதற்காக ஏற்பட்டவைகள். ஸம்ஸ்கிருதத்தில் கொஞ்சம் பரிசயம் செய்துவிட்டு பாஷாந்தரம் வாசித்து, அதன் மூலமாய் நம்முடைய க்ரந்தங்களுக்கு அர்த்தம் சொல்லவருகிற நம் ஜாதியான ப்ராம்ஹணர்களை நாம் நம்பக்கூடாது. இவர்கள்தான் நம்முடைய மதத்தை கெடுக்கிறவர்கள். பி. எல். பரீட்சையில் தேறினவர் ஒருவர், கிருஷ்ணன் கோபஸ்த்ரீகளுடன் செய்ததெல்லாம் அக்ரமமென்றும், அதற்கெல்லாம் கிருஷ்ணன் பகவான் என்று பண்டிதர்கள் தப்பான ஸமாதானம் சொல்லுகிறார்களென்றும் சொன்னார். அதற்கு நான் கோபிகைகளே கிருஷ்ணனை பகவான் என்று ஒப்புக்கொண்டு அவரால் தம்முடைய ஸமஸ்த தாபங்களும் தீரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே,

'ந்ரூ வஷு ஜொவிகா நநதொ ஸவாநு கவிலுதெஷிநாம ஸஹாா
தூஜுக் '

என்றேன். அந்த விஷயம் தனக்குத் தெரியாது என்று அந்த நண்பர் சொல்லிவிட்டார். கோபிகைகளுடைய உத்தமமான பக்தியை அரிய ஸாமாந்ய ஜனங்களுக்கு முடியாது. உத்தம குலங்களில் அநேகம் ஜந்மம் எடுத்து ஆசார்யர்களுடைய அநுக்ரஹம் பெற்றாலொழிய அதை அறியமுடியாது.

இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கோஷ்டியைக் காண எனக்கு அதிக சந்தோஷமாகிறது. ப்ராம்ஹண்யம் இன்னும் கொஞ்சம் இவர்களிடத்திலிருந்துவருகிறது. என்னுடைய சிறிய வயதில் ஸம்ஸ்கிருதம் வாசிக்க முடியாமல் போனதைப் பற்றி எனக்கு வயதாக ஆக நாளுக்குநாள் மனஸில் வியாகூலம் உண்டாயிருக்கிறது. ஆகையால்தான் என்னுடைய குமாரனை (K. S. ராமஸாமி சாஸ்திகரிள்) 5-வயதில் ஸம்ஸ்க்ருத படிப்பில் போட்டேன். நான் காலேஜில் போதித்த வழிகளெல்லாம் சுத்த நாஸ்திகவாதம் என்று சேழ்விப்பட்டு, பிரம்மஸ்ரீ சடகோபாசார்யர் அவர்கள் என்னிடம் வந்து கொஞ்சகாலம் கீதாபந்யாஸம் செய்து, என் நாஸ்திகக் கொள்கையின் ஆணிவேர்களை அறுத்துவிட்டார்;

ஸ்ரீ உ. வே. அக்நிஹோத்ரம் வாஜபேயம் வீராகவதாதாசார்யர்— 'வேதாயத்யனம் செய்த ஸ்வாமிகளை ஆராதிப்பது மிகவும் மேலானது. வேதத்தினால் பூர்ணமான முகத்தையுடைய ப்ராம்ஹணன் நன்றாய் ஸாப்பிட்டிருந்தாலும் அவனுக்கே ஆஹாரத்தைப் போடு. வேதாத்யயநம் செய்யாத ஒரு மூர்க்கன் ஆறுநாள் பட்டினி என்று வந்தாலும், நீ செத்தாலும் பாதகமில்லை; நீ இருந்து உனக்கும் ப்ரயோஜனமில்லை; பிறருக்கும் ப்ரயோஜநமில்லை, ஆகையால் உனக்கு ஆகாரம் கிட்டாது' என்று சொல்லிவிடு,

'வெஷவ ஹிணஃ ஜுவம விஷ்ரம ஸு ஹுக்ஷுஜவி ஹொஜயெகு ।
நவஜிவஃம நிராஹாரம ஷ யுக்தம வொவவாஸிதம ॥'

என்று வ்யாஸ ஸ்ம்ருதி வசநம். வேதமாகிற கலப்பையினால் உழப்பட்ட ப்ராஹ்மணனுடைய முகமாகிய க்ஷேத்திரத்தில் விரைக்கப்பட்ட த்ரவ்யங்கள் இந்த ஜந்மத்தில், நநதாங்யமாகவில்லை ஐச்வர்யமாய் பரிணமிக்கின்றன. இந்த கார்யங்களுக்கு பாத்ரவ்யம் சேர்ந்தால் மேல்மேலும் விருத்தியடையும். அதனால்தான் ஸத்துக்களை யாசித்து தர்மம் செய்கிறோம்.

இதன்பின் ஸபை கலைந்தது.

டி. ராமஸ்வாமி அய்யங்கார்.

ஐ ய வி னா ?

வேதாந்த தீபிகை பத்ராதிபர்க்கு,—

அடியில் கண்டவற்றிற்குத் தாங்களாவது மற்ற ஸ்ரீமாங்களாவது பதிலை இத்"தீபிகை" வாயிலாகத் தெரிவிக்கப் பிரார்த்தனை.

வைணவ சமயத்தில் பிறந்தவர்கள் அல்லது புகுந்தவர்கள் ஸதாசார்யனையடைந்து பஞ்ச ஸம்ஸ்காரங்களைப்பெற்று இல்லற தருமத்தை நடத்திவரும்போது:—

(க) "ஏகாதசி, அமாவாசை, சிராத்தம் இவற்றைக் கைக்கொள்ளுதல் குற்றமாகுமா"?

(உ) "ஏகாதசி, அமாவாசை, சிராத்தம் இத்தினங்களில் விருதம் இருப்போர், தேகத்தை வாட்டி வதைக்கும் பாவத்திற்கு ஆளாக்கப்படுவோர்" என்பது சாஸ்திர ஸம்மதமா ?

(ங) நெற்றியில் திருமண் தரித்து, மீசையை எடுத்துவிட்டு, பெண்டுபிள்ளைகளுடன் இல்லற வாழ்க்கையிலிருப்போர் யாவரும்

"விவசாயம், கைத்தொழில், வியாபாரம், உத்தியோகம் முதலியவற்றால் ஜீவனம் செய்தல், சொல்லாலும், அளவு நிறைகளாலும், அதிகாரத்தாலும் பிறரை ஏமாற்றி மோசம் செய்வதே ஆகும். ஆகையால் அவை யாவும் மகத்தான பாவங்களென்றும்;

'தெருக்களைச்சுற்றி பாடல்களைப் பாடிக்கொண்டே இன்னார் இனியார் என்ற பேதபுத்தி கொள்ளாமல் எல்லா ஜாதி சமயத்தாரிடத்திலும் ஸமரஸமாய் அரிசி (புழுங்கலரிசி உட்பட) காய் கறிகளை யாசித்துப் பொழுது போக்குவதே வைணவ சமய நெறி என்றும்' கூறப்படுவது தரும சாஸ்திர விதியா ?

(ச) இவ்வாறு கூறிக்கொண்டே மேற்படி பாதகத்தொழில் செய்வோராகிய விவசாயிகள் கைத்தொழிலாளர்கள் வியாபாரிகள் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களிடமே யாசித்து, அவர்கள் தரும் புழுங்கலரிசி முதலிய உணவுப்பொருள்களையும்

காசு, பணம், துணி முதலிய யாசகப்பொருள்களையும் வாங்கி பெண்டு பிள்ளைகளோடு ஜீவித்தலே பாவமற்ற உததமத் தொழிலென்பது' வைணவ சமயாசாரியர்களின் கட்டளையா ?

(ரு) ஏகாதசி தினத்தில் கூட சுரைக்காய், புண்ணாக்கு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, முதலியவற்றைத் தள்ளாமல் (அதாவது மற்ற நாட்களைப்போலவே) உண்ணவேண்டும் நீக்கவேகூடாது, சமரச எண்ணம் இல்லாமல் இது ஆகும் அது ஆகாது என்று பிரிவுசெய்து அவற்றை நீக்குமவன் வைணவனாகமாட்டான்' என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதா ?

மனித தேகம் கிடைத்ததன் பயனை அறியாமல், சோம்பித்திரிந்து, யாசித்துப் பிறர் ஸகாயத்தால் வயிறு வளர்த்து குடும்பத்தை நடத்திவரும் சில வைணவசின்னத்தரித்த போலி வேஷதாரிகளின் வார்த்தைகளை நம்பி அமாவாசை சிராத்தம் ஏகாதசி நாட்களைப்பலர் கைக்கொள்ளாது விட்டுவிட்டனர். இன்னமும் பலர் விட்டுவிட யோசித்து வருகின்றனர். பிதுர் கருமத்தை விட்டால் குற்றம் வருமே சாபம் நேருமே! சந்ததி அழிந்து போமே! என சமாதானம் கூறிவருகின்றனர் சிலர்.

ஆகவே வைணவர்கள் பிதுர்க்கடனாகிய அமவாசை சிரார்த்தங்களைக் கொள்ளுவதா ? தள்ளுவதா ? என்பதற்குவேண்டிய ஆதாரங்களைத் தெளிவான தமிழ்நடையில் தெரிவித்தால் பெரிய உபகாரமாகும்.

வைணவ ஸமய ஒழுக்கம் இந்நிலையில் சீரழிந்து, ஸாதாரண தினசரி கடமைகளிலேயே பலவித ஸந்தேகங்களும் தடைகளும் ஏற்பட்டு, ஸமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கபடி வாதம் பிரதிவாதங்கள் நடைபெற்று, இன்னது செய்யத்தக்கது, இன்னது விலக்கத்தக்கது! என்ற உண்மை தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருப்பதால் இப்போதாவது ஸமயாச்சார்யர்களும் மடாதிபதிகளும் விரைந்து முன்வந்து தம்தம் சிஷ்யகோடிகளுக்குச் சமயஞானத்தையும் சாஸ்த்திர உண்மையையும் போதித்து ஒழுக்கமும் தர்மமும் கெடாமல் காப்பாற்றவேண்டுவது மிக்க அவஸரமும் அவசியமும் ஆகுமென்பதைச் சமயாபிமானிகள் அடுத்தடுத்து இத்தீபிகை மூலமாகவாகிலும் ஆசார்யஸ்வாமிகட்கும் ஞாபகமூட்டுதல் இன்றியமையாத காலத்திற்கேற்ற பேருதவியாகும் என்பதை மிக்க வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றனன்.

திருவண்ணாமலை. } ஸ்ரீவைஷ்ணவ பாததூளி,
வைத்திய வெங்கடாசல முதலியார்.

ஸ்ரீ வி ஷ் ணு ப க் தி.

(என். ரங்காசாரி.)

உயர்குலத்துதிப்பினும் உளத்தில் நேயமும்
அயர்தவம்தருமமும் அறிவும் ஞானமும்
பெயர்நமதிசைத்திடும் பீடும் இல்லரேல்
கயவர்அங்கவர்எனக் காண்டல் வேண்டுமால்.

(இ - ள்.) உயர் குலத்து - உயர்ந்த சாதியிலே, உதிப்பினும் - பிறந்தாலும், உளத்தில் - மனத்திலே, நேயமும் - பக்தியும், அயர்தவம் - வருந்திச் செய்யவேண்டிய தவமும், தருமமும் - சாஸ்திரங்கள் விதித்தவற்றையே செய்யுந் தன்மையும்; அறிவும் - உணர்ச்சியும், ஞானமும் - விவேகமும்—, நமது பெயர் இசைத்திடும் பீடும் - நமது திருநாமத்தைச் சொல்லவல்ல சிறப்பும்; இல்லரேல் - பெறாதவராயிருந்தால்—, அவர் - அப்படிப்பட்ட குணமில்லாதவர், கயவர் - கீழ்மக்களேயாவர்; என காண்டல் வேண்டும் - என்று, (எ - று.)

ஞமலியிற் இழிபவத்தை நண்ணினும்
எமதுநாமந் தெரிந்திசைப் பாரெனில்
கமலநான்மு கனினுங்கனல் கண்ணனினும்
அமலரேஅவர் எனஅறிதல் சீலம்ஆம்.

(இ - ள்.) ஞமலியின் - நாயைக்காட்டிலும் கடைப்பட்டதான, இழிபவத்தை - இழிந்த சாதியாம் பிறப்பை, நண்ணினும் - அடைந்திருந்தாலும், எமது நாமம் - எமது திருநாமத்தை, தெரிந்து - உணர்ந்து, இசைப்பர் எனில் - சொல்லுவரே யானால் அவர், கமலம் நான்முகனினும் - நாபித்தாமரை மலரில் தோன்றிய நான்கு திக்கையும் நோக்கிய சதுர் முகங்களையுடையவனான பிரமதேவனைக் காட்டிலும், கனல் கண்ணனினும் - நெருப்புக் கண்ணையுடைய உருத்திரமூர்த்தியைக்காட்டிலும், அமலரே - குற்றமற்றவரேயாவர், என அறிதல் - என்று தெரிந்துகொள்ளுவதே, சீலம் - நல்லொழுக்கத்திற்கு ஏதுவாம். (எ - று.)

॥ ஸ்ரீ: ॥

ஸர்வேஶ்வர காருண்யம்.

(வங்கீபுரம் ஸ்ரீ. உப. வி. ஸ்ரீராமதேசிகாசார்யர், சிரோமணி.)

ச்ரிய: பதியான ஸர்வேச்வரனுடைய அஸாதாரணங்களான அநந்த கல்யாண குணங்களில் காருண்யமே ஸர்வோத்தமமாய் விளங்குகிறது. காருண்யமாவது தன் ப்ரயோஜநத்தைக் கருதாமல் சேதனர்களுடைய துக்கத்தை நிவ்ருத்திசெய்ய இச்சை என்று நம் தேசிகன் அநேக இடங்களில் தெளிவாய் அருளிச்செய்திருக்கிறார். இந்த காருண்யம் ப்ரளயகாலத்தில் அசேதன துல்யங்களாகக் கிடக்கும் ஜீவர்களுக்கு சரீரங்களையும் இந்த்ரியங்களையும் கொடுத்து தத்வஜ்ஞானத்தையும் உதவி, மோக்ஷ ஸாதனங்களான உபாயங்களில் மூட்டி, ஸ்ரீ வைகுண்டத்தில் திருமாமணி மண்டபத்தில் அடியார் குழாங்களுடன் கூடி எம்பெருமானை ஸர்வ காலத்திலும் ஸர்வாவஸ்தைகளிலும் அநுபவிப்பதாகிய பெரும்பேற்றை அளிக்கக் காரணமாயிருக்கிறது. இதன் மிகுதியால் ஸர்வேசுவரன் ப்ராணிகளின் ஸமஸ்தாபராதங்களையும் க்ஷமிப்பதைக் கண்டு ஆழ்வான்,

‘யத் ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேऽப்யநாஶ்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே ।
ஏவம் ஸதா ஸகல ஜந்மஸு ஸாபராதம்
க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்தி விராமமாத்ராத் ॥’

(ப்ரும்மாவின் அநேக கல்பங்களில் பலத்தை அநுபவித்தபோதிலும் நசிக்காத பாபங்களை அரை க்ஷணத்தில் ஒரு ஜந்து செய்துவிடுகிறான். இப்படி அநேக ஜந்மங்களில் எப்பொழுதும் பாபகர்மங்களையே அநுஷ்டிக்கும் ஜீவன் பிறகு இப்பாபங்களை செய்ய நினையாநாகில் அதனாலேயே அவ்வளவு பாபங்களையும் நாசம் செய்துவிடுகிறாய். என்ன ஆச்சர்யம்!) என வியந்தார்.

மற்றொரு சுலோகத்தில்—

‘பாபீயஸோऽபி ஶரணாகதி ஶப்தபாஜோ
நோபேக்ஷணம் மம தவோசிதமீஶ்வரஸ்ய ।
ஜ்ஞாந ஶக்தி கருணாஸு ஸதீஷு நைவ
பாபம் பராக்ரமிதுமர்ஹதி மாமகீநம் ॥’

எம்பெருமானே! நான் மஹாபாபியாயினும் உன்னையே சரணமாக அடைகிறேன் என்று அநுஸந்திப்பதால் ஸர்வேசுவரனான நீ என்னை உபேக்ஷிப்பது உசிதமல்ல. உன்னுடைய ஜ்ஞானம், சக்தி, காருண்யம், இந்த குணங்கள் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்போது, என் பாபங்கள் தன் வல்லமையைக்காட்ட முடியாதாகையால் நான் பாபி என்று கருதி என்னைக் கைவிடவும் இடமில்லை) என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில் தன் பாபம் கார்யகரமல்லவென்பதற்கு ஜ்ஞானம், சக்தி, கருணை, இவைகளை காரணமாய் நிரூபித்திருப்பினும் கருணையே முக்கிய காரணமென்று ஆழ்வான் திருவுள்ளமென்று நாம் தீர்மானிக்க இடமிருக்கிறது. ஏனெனில் பாப நிவ்ருத்தியில் எம்பெருமானுடைய கருணையைப்போல அவனுடைய ஜ்ஞான சக்திகள் உபகரிக்காதல்லவா?

ஸர்வேசுவரன் ஒவ்வொரு காலங்களில் ஆச்ரிதர்களிடமுள்ள கருணையின் மிகுதியால் அவர்களை ரக்ஷித்திருக்கும் ப்ரகாரங்களைச் சிந்தித்தால் அதன் ஏற்றம் நன்கு விளங்கும். அவற்றில் சிலவற்றை இங்கு ஆராய்வோம்:—

ஒரு பொய்கையில் மலர் கொய்ய யானை ஒன்று இறங்க, அங்கிருந்த முதலை அதன் காலைப் பிடித்திழுக்க, யானையும் நடுங்கி “ஆதி காரணமே”

என்றழைத்துப் பகவானைப் பலமுகமாய் துதிக்கவே, அதில் ஜகத்திற்கும் உபாதானகாரணமான ஸர்வேசுவரனைத் தவிர மற்ற யாரும் ஆதிமூல சப்தத்திற்கு இலக்காகாமையாலே ஸ்ரீ வைகுண்டத்திலே அரவணையில் சாய்ந்திருக்கும் பரமபுருஷன் மிக்க பரபரப்புடன் ‘ அசந்த்ருப்த ஸம்ப்ரமகதிஸ்ஸம்ஹித ஸம்ஹ்ருதம் ’ என்கிறபடியே ஸேநாபதி ஹஸ்தாவலம்பநம், ரத்நபாதுகா ஸ்வீகாரம் (ஸேனாபதியினால் கைலாகுக் கொடுக்கப்படுதல், திவ்யமணி பாதுகைகளைச் சாற்றிக்கொள்ளுதல்) முதலிய ப்ரயாண ஸந்நாஹங்கள் ஒன்றையும் நினைக்காமல் கருடன்மீது ஏறிவருங்காலத்தில் வைநதேயனுடைய வேகத்தையும் அத்யல்பமாகக் கருதி ‘ ஆகூஷிப்ய விஹகராஜஸ்கந்தம் அதிஜவாத் ’ என்கிறபடியே அவரையும் தான் இழுத்துக்கொண்டு பொய்கையேற வந்து திருவாழி யாழ்வாரால் முதலையைக் கொன்று யானையை ரக்ஷித்து திர்யக்கான யானையிடம்கருணையை ஸர்வருமறியச் செய்தபடியை திருமங்கை மன்னன்,

‘ மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த,
கானமர்வேழம் கையெடுத்தலறக் கராவதன் காலினைக்கதுவ
ஆனையின் துயரம் தீர்ப்புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்டானை,
தேனமர்சோலைமாடமாமயிலைத்திருவல்லிக்கேணி கண்டேனே ’ என்று

அநுபவித்தார். ஸர்வேச்வரனால் மயர்வறமதிநல மருளப்பெற்ற நம்மாழ்வாரும்,

‘ மழுங்காதவைநுதிய சக்கரநல்வலத்தையாய் தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே ’ என்று அநுஸந்தித்தார்.

இவ்விடத்தில் ஸ்ரீதேசிகனும்,

‘ ஸக்ருத் ஸமாச்ரிதா ஸர்வே ஸர்வைஸ்ஸாத்யா:
ஸக்ருதேவ ப்ரபந்நாய ஸந்தோ வார்யா: ।
ஸாயாநே க்வசித் ஸமஸ்தஜகதோ
நாதஸ்ய ஸந்தர்ஷிதா விசேஷஸ்ஸ த்வம் ॥’

(இன்னும் வரும்.)

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ச்ராத்தம்.

(காடாந்தேத்தி-கோபாலாசார்யர்.)

—தேவபித்ருகார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்—

இந்நிலவுலகின்கண் இம்மைப்பயன் மறுமைப்பயன் ஆகிய இருவித பலன்களை அடைவதற்கு ஸாதனமாய் மகர்ஷிகள் தங்கள் ஆழ்ந்த கருத்தினால் கண்டு ஏற்படுத்தப்பட்டும் புராதனமாயுமுள்ள அந்தந்த வர்ணாச்ரம தர்மங்களுக்கு அநுகுணங்களான கர்ம விசேஷங்கள் 1 ‘ வேதங்கள் மறைந்து விட்டன, தர்மசாஸ்த்ரங்கள் லோபித்துவிட்டன த்விஜர்கள் பெரும்பாலும் பதிதர்களுக்குச் சமானமாய் விட்டார்கள், சிக்ஷை முதலிய அங்கங்கள் சிதறுண்டுபோய் விட்டதுகள், ஆச்சரியம், கலிபுருஷன் வார்த்தகயத்தையடைந்தும் வ்ருத்தியடைகிறான், என்று சொல்லும் கணக்கில் வரவரக் குறைவு அடைந்து வந்ததென்று சொல்லும் நிலைமையிலிருக்கிறதென்றாலும், அவை இன்னும் ஆசார ப்ரதானர்களான சில மஹான்களால் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்றும் தெரிந்தவிஷயம். இக்காலத்தில், ஸந்த்யாவந்தனம், ச்ராத்தம், இவைகளை அநுஷ்டித்தாலே, அவர்களே பரமைகாந்திகளென்று கொண்டாடவேண்டியதாயிருக்கிறது. எந்தக் கர்மங்கள் அநுஷ்டானத்தில் இருந்தாலும் இல்லாமல் போனாலும் ச்ராத்தம் என்பது மட்டும் அவசியம் எல்லோராலும் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. அதினுடைய ஸ்வரூபம் உபயோகம் ப்ரயோஜனம் இவைகளைத் தெரிந்துகொள்ளாமல் போனாலும் நாம் செய்யவேண்டிய கடமைகளுள் இதுவுமொன்று என்பதாக நினைத்து ஒரு நம்பிக்கையுடன் சிலர் அநுஷ்டிக்கிறார்கள். இன்னும் சிலர் கட்டுப்பாட்டுக்குப் பயந்து பண்ணுகிறார்கள். மற்றும் சிலர் ஏதோ சாஸ்திரத்தில் சொல்லியபடி நடத்தினால் பலம் வருகிறபடி வரட்டும், அதைப்பற்றி நாம் விசாரிக்கவேண்டுவதில்லையென எண்ணி அநுஷ்டித்துவருகிறார்கள். ச்ராத்தத்தின் ஸ்வரூபம் ப்ரயோஜனம் இவைமுதலியவற்றை இவ்விடம் வினாவிடையாய் எழுதப்படுகிறது. அம்ருத ஸரஸ்ஸில் ஸுகுணனென்றும் ஸுசீலனென்றும் இரண்டு நண்பர்களிருந்தார்கள். அவர்களில் ஸுகுணனென்பவன் பிறர்களின் குணத்தை அறிபவன். ஸுசீலனென்பவன் நல்லொழுக்கமுள்ளவன். இவர்களிருவரும் எப்பொழுதும் இணைபிரியாதவர்கள். ஒரு ஸமயம் கங்காயாத்திரை செய்வதாக ப்ரயாணமாகி வழியிலுள்ள புண்ணிய நதிகளையும் ஆச்ரமங்களையும் க்ஷேத்திரங்களையும் அவ்விடத்திலுள்ள விசேஷங்களையும் பார்த்துக்கொண்டு கங்கையின் தீரத்தையடைந்தார்கள். வழியில் கங்காயாத்திரா ப்ரபாவத்தை விரிவாய்ச் சொல்லிப் பிறகு கயாமாஹாத்மயத்தையும் ஸுசீலன் சொல்லி முடித்தான்.

ஸுகுணன்:— ஆச்சரியமடைந்து நண்பா! உன்னிடம் கங்காயாத்திரையின் ப்ரபாவமும் கயையின் மாஹாத்ம்யத்தையும் கேட்ட எனக்கு உள்ளடங்கா மகிழ்ச்சி உண்டாகிறது. இன்றையதினம் தன்யனானேன்.

ஸுசீலன்:—இவ்விதமே பூர்வர்களும், பகவத்கீதா பாராயணம், கங்கா ஜலபானம், பகவதாராதனம், இவைகளை செய்கிறவர்களுக்கு யமலோக கமனம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள்.

1. ச்ருதிர்நஷ்டா ஸ்ம்ருதிர்லுப்தா ப்ராயேண பதிதம் த்விஜா: ।
ஸம்ஹாரிவ விசீர்யந்தே ஹா ஹ்யாச்சர்யே கலி: ।

ஸுகுணன்:— நல்லது. நாம் இவ்விடம் வந்து நாளாய்விட்டது. ஊருக்குப் புறப்படலாமா.

ஸுசீலன்:— என்ன அவஸரம். நம்முடைய தாபத்ரயம் தான் எப்போதும் இருக்கிறது. புண்ய தீர்த்தத்திலாகிலும் புண்ய க்ஷேத்ரத்திலாகிலும் மூன்று நாள் வஸிக்கவேண்டியது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இவ்விடத்தில் மூன்று நாளிருந்து தேவருஷி பித்ரு தர்ப்பணங்களைச்செய்து அப்புறம் போகலாம்.

ஸுகுணன்:— நண்பா! நல்லது உனக்கு விசாரமில்லை. என் வீட்டுவேலையை யார் செய்வார்கள்? உன்னைப்போல் வெட்டி அஸாமியாயிருந்தால் தீர்த்தாடநம் புண்யக்ஷேத்ரவாஸம் இவைகளைச் செய்துகொண்டிருக்கலாம். எனக்கு ஜோலி அதிகமல்லவோ.

ஸுசீலன்:— 1 ‘அலை ஓய்ந்தபிறகு ஸமுத்ரத்தில் ஸ்நாநம் செய்ய நினைத்திருப்பதுபோல’ நாம் தாபத்ரயம் நீங்கி இந்த காரியம் செய்ய நினைப்பது; கொஞ்சம் பொறுத்திரு. நாளையதினம் என் பிதாவுக்குச் செய்ய வேண்டிய ச்ராத்தமும் நேர்ந்திருக்கிறது. அதை இவ்விடத்தில் செய்துவிட்டு கயையில் ச்ராத்தம் செய்து பிண்டப்ரதானம் செய்து விடலாம் என்று எனக்கு எண்ணம். ஏனென்றால் 2 ‘பித்ருதேவதைகள் நம்முடைய வம்சத்தில் அனேகம் புத்திரர்கள் உண்டாகவேண்டும், ச்ராத்தத்தை அக்ஷயமாக்கவல்ல ஆலமரம் எவ்விடத்தில் உளதோ அப்படிப்பட்ட கயாக்ஷேத்ரத்தை அடைந்து ஒருவனாவது பிண்டம் செய்யமாட்டானா’ என்று ப்ரார்த்திக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதனால் நீயும் நானும் கயாச்ராத்தம் செய்து ஊருக்குப்போவோம்.

ஸுகுணன்:— ச்ராத்தமென்றால் என்ன, அதை விளங்கச்சொல்.

ஸுசீலன்:— நன்றாயிருக்கிறது. இதுவரையில் செய்ததில்லையோ. இப்படிக்கும் வரும் நிலைமை கலிபுருஷனுடைய கோலாஹலமே. இப்படிப்பட்ட ஸஹவாஸம் கிடைத்ததே.

ஸுகுணன்:— நண்பா! கோபிக்கலாகாது. வருஷத்தில் எப்போதோ ஒரு தடவை வருகிறது. எனக்கு ஜ்ஞாபகமில்லை. புரோஹிதர் திதியைச் சொல்லுவாரே தவிர எனக்குத் தெரியாது.

(இன்னும் வரும்)

---

1. സമുദ്രേ ശാന്തേ കല്ലോലേ സ്നാനം കർതുമിഹേച്ഛതി ॥

2. ഏഷ്ടവ്യാ ബഹവഃ പുത്രാഃ യദ്യേകോഽപി ഗയാം വ്രജേത് ।
യത്രാസൌ പ്രഥിതോ ലോകേഷ്വക്ഷയ്യകരണോ വടഃ ॥

பா. அ. 129. 1.

ஸ்ரீ:.

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தமும், தர்ம சாஸ்த்ரங்களும்.

(இஞ்ஜிமேடு-ஸ்ரீ உ. வே. ரங்கநாதாசார்யர்.)

[illegible] ।
[illegible] விஷவத் வாரணம் ॥

நடந்த ருதிரோத்காரி வருஷத்தின் மாசிபங்குனி மாதங்களின் வேதாந்த தீபிகையில், மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம் என்கிற சிரோலிபியோடு கூடிய சில வடகலைபரம்பரைகளைப் பார்வையிட்டேன். அதின்பேரில் ‘[illegible] நர: [illegible]’ என்கிற சாஸ்த்ரத்தை யநுஸரித்து அடியேனுக்கு அதைக் கண்டித்து எழுதும்படி நேர்ந்தது. இதைப் பார்க்கும் ஸ்வாமிகள் அந்த ஸ்வாமியின் ஸஞ்சிகையையும் இதில் எடுத்திருக்கும் ஸ்ம்ருதிகளையும் கூடவைத்துக்கொண்டு பார்க்கவேண்டுமென்பது அடியேனுடைய முதல் ப்ரார்த்தனை.

சோளதேசத்தில் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் பிறந்த ஒருவன் கிறிஸ்து மதஸ்தர்களின் உபந்யாஸங்களைக் கேட்டும் அவர்களின் மத க்ரந்தங்களைப் பார்த்தும் மயங்கி ஆஸ்திக்யத்தைவிட்டு, தன் ஜாதிக்குரிய யஜ்ஞோபவீதத்தையும், புண்ட்ரத்தையும், ஸந்தியாவந்தநாதி கர்மங்களையும் ஆத்யந்திகமாய் துலைத்து அவர்களோடு ஸஹபோஜநாதிகளைச் செய்து மாதாபிதாக்கள் சொல்லியும் தான் திரும்பிவர ஸ்வாதந்த்ர்யமிருக்கச் செய்தேயும், உடனே திரும்பாமல் ஸ்வயம்நஷ்ட: என்கிறபடி தன் பத்னியையும் தன்னோடொக்க மதாந்தரத்தில் ப்ரவேசிப்பித்து அவளுடன் கூட ஸுமார் 10-வருஷத்திற்கு மேல் அந்த மதத்திலேயே இருந்துவிட்டு, தத்காலம் ப்ராயச்சித்தோன்முகனானான். பின்பு அவன் ஸ்ரீபெரும்பூதூரில் ஈச்சம்பாடி ஸ்ரீ. உப. தேசிகாசாரியரால் ப்ராயச்சித்தம் செய்விப்பிக்கப்பட்டான். பிறகு சில மாதங்கழித்து அதை அநுமோதித்து கும்பகோணத்தில் ஸ்ரீராமன் ஸன்னிதியில் ஸ்ரீ வாஜபேயம் ஸ்வாமி அக்ராஸநத்தின் கீழ் நடந்த ஒருபரிஷத்தில், ஸ்ரீ. உப. தேசிகாசாரியர் செய்துவைத்த ப்ராய்ச்சித்தம் ரொம்பவும் ஸரி என்றும், அதினால் இவன் ஸம்வாஸார்ஹன், அதாவது ஸஹபோஜன ஸம்பந்தாதிகளுக்கு அர்ஹன் என்றும் நிச்சயிக்கப்பட்டு ஸேது ஸ்நாந பூர்வகமாய் குடும்பத்தில் சேர்க்கப்பட்டான். அதின்பேரில் வேதாந்த தீபிகையில் இந்த விஷயம் எழுதப்பட்டதென்பதை எல்லாரும் மறக்கக்கூடாதென்பது இரண்டாவது ப்ரார்த்தனை.

ப்ரக்ருத விஷயத்தில் முதலில் பூர்வபக்ஷஸித்தாந்தரூபேண ஸாரமாய் விசாரிக்கவேண்டிய விஷயம் சில உண்டு. அதில் கீழ்சொன்ன ரீதியாய் மதாந்தர ப்ரவேசரூப பாபம் நேர்ந்தால் அது புத்தி பூர்வக பாபத்தில் சேர்ந்ததா அல்லது அபுத்தி பூர்வகமா என்பது முதலில் விசாரிக்கவேண்

டிய விஷயம். அது புத்தி பூர்வகமென்று ஏற்பட்டால் அதற்கு ப்ராயச்சித்தமுண்டா அல்லது இல்லையா என்பது இரண்டாவது விசாரிக்கவேண்டிய விஷயம் 'அவேர நிஷ்க்ருதிம் ப்ரூயாத் அபிஸந்திக்ருதே த்விஜ' இத்யாதி ஸ்ம்ருதிகளின்படி - பக்ஷாந்தரத்தில் புத்தி பூர்வத்திற்கும் ப்ராயச்சித்தமுண்டென்று ஏர்ப்பட்டாலும், அது எல்லா புத்திபூர்வக பாபத்திற்குமா அல்லது பதநீய வ்யதிரிக்த புத்திபூர்வகத்திற்குமாத்திரமா என்பது மூன்ருவதாக விசாரிக்கவேண்டிய விஷயம். மஹாபாதகங்களே பதநீயங்களா - அல்லது அதிபாதக ஸமபாதகாதிகளிலும் சில பதநீயங்களுண்டா என்பது நாலாவது விசாரிக்கவேண்டிய விஷயம். அதிபாதகாதிகளிலும் சில பதநீயங்களுண்டென்ருல் வெகுகாலம் மதாந்தர ப்ரவேசரூப ப்ரகிருத பாபமானது அதிபாதகாதிகளில் எதில் சேர்ந்தது; இது பதநீயமா, அல்லது அபதநீயமா, என்பது ஐந்தாவது விசாரிக்கவேண்டிய விஷயம்.

இதில் இந்த பாபத்தை அபுத்தி பூர்வகமாக ஸமர்த்தித்து இதற்கு ப்ராயச்சித்தம் விதிக்கலாமென்றும், புத்திபூர்வக மானாலும் பதநீய வ்யதிரிக்த புத்திபூர்வகமாக்கி இரண்டு பங்கு ப்ராயச்சித்தம் விதித்து ஸமாதாநம் செய்யலாமென்றும் பூர்வ பக்ஷிகளின் அபிமாநம்.

ப்ரகிருத விஷயம் அபுத்தி பூர்வகமன்றென்றும் புத்திபூர்வகத்திலும் பதநீயதமமென்றும், ப்ராயச்சித்தம் செய்தாலும் ஸம்வ்யவஹாரார்ஹதை வாராதென்றும் ஸித்தாந்திகளின் நிர்ணயம்.

இனி இதை விசாரிப்போம். வாஜபேயம் ஸ்வாமி ஆரம்பத்திலேயே, ஒருவன் புத்திபூர்வகமாகவோ அல்லது பிறருடைய துர்போதனையினுலேயோ மதாந்தரத்தில் ப்ரவேசித்தது என்றும் தீபிகையின், 166-ம் பக்கத்தில் பலம் என்பதை விசேஷிக்கவில்லையாகையால் பொதுவாக வாக்பலம், சரீர பலம் ஆகிய இரண்டையும் கிரகித்துக்கொள்ள ஆக்ஷேபம் சொல்லமுடியாது என்றும் எழுதி இருப்பதால், பிறருடைய போதனையினுல் செய்யப்பட்ட பாபமும் பலாத்காரத்தால் செய்யப்பட்டதே என்றும், ஆகையாலேயே அது அபுத்தி பூர்வக பாபத்தில் சேர்ந்ததென்றும் ஸ்தாபித்து விடலாமென்று அந்த ஸ்வாமி நினைத்திருப்பதாய் ஏற்படுகிறது. இப்படி, பல சப்தம் பொதுவாக எல்லா அர்த்தத்தையும் போதிக்குமானுல், ஒரு ப்ராம்மணி ம்லேச்சாதிகளுடைய உபதேச பலத்தாலோ அல்லது அர்த்தபலத்தாலோ அல்லது ரூப பலத்தாலோ வசீகிருதையாய் ம்லேச்சர்களோடு ஸம்ஸர்கித்தால் அவளையும் பலாத்புக்தையாக்கி அதையும் அபுத்தி பூர்வகத்தில் சேர்த்து,

'ஸம்ப்ராஹேண பாலஸ்த்ரா ஹத்வா பஹ்வீ வஸாத்யபாக: ।
க்ருத்வா ஸாம்ஸ்யம் க்ருத்யம் ப்ரஸம்யோ த்யாகாஸனோ ப்ரூவீத் ॥'

என்கிற சாஸத்ரப்படி ஸ்வல்ப ப்ராயச்சித்தம் பண்ணிவைத்து அவளையும் சேர்க்கவேண்டிவரும். அப்படியானுல் புத்திபூர்வக வ்யபிசாரமே யொழிந்து,

'அதவா ஸ்வப்ரதிக்ருஜ்ஞா ச்ரிஷ்யோமாயா யுமாவயா ।
பதிவ்ரதா விசேஷேண 1. ஜாம்பிதா பதமாவயா ॥'

இத்யாதிகளான ஸ்த்ரீதர்ம விஷயக சாஸ்த்ரங்கள் நிர்விஷயமாக ப்ரஸங்கிக்கும். மேலும் இம்மாதிரி யுக்த்யாபாஸங்களைக்கொண்டு எல்லாப் பாபங்களையுமே, அபுத்தி பூர்வகமாக்கலாமாகையால் புத்தி பூர்வகம் அபுத்தி பூர்வகம் என்கிற விபாகமே ஒழியவேண்டிவரும். ஆகையால், புத்தி பூர்வகமென்ருலென்ன அபுத்தி பூர்வகமென்ருலென்ன. மஹர்ஷிகள் இந்த விஷயத்தில் எப்படி சொல்லுகிருர்கள் என்பதைமுதலில் விசாரித்து நிர்ணயிக்கவேண்டும். அதில் யாஜ்ஞவல்க்யர்,

'ப்ராயச்சித்தைரபைத்யேநோ யதஜ்ஞாநக்ருதம் பவேத் ।
காமதோ வ்யவஹார்யஸ்து வசநாதிஹ ஜாயதே ॥'

என்று அஜ்ஞாந சப்தத்திற்கு எதிர்தட்டாக, காமசப்தத்தை ப்ரயோகித்திருப்பதாலும் மநு,

'அகாமத: க்ருதே பாபே ப்ராயச்சித்தம் விதுர்புதா: ।
காமகாரக்ருதேப்யாஹுரேகே ச்ருதிநிதர்சநாத் ॥'

என்று அபுத்தி என்பதை அகாமமென்றும், புத்தி என்பதை காமமென்றும் சொல்லிஇருப்பதாலும், வஸிஷ்ட தேவலாதி சில மஹர்ஷிகள்,

'நாபிஸந்திக்ருதே ப்ராயச்சித்தம்' என்றும்,

'அபிஸந்திக்ருதே பாபே ஸக்ருதாவ்ருத்த நிஷ்க்ருதி: ।
அவேர நிஷ்க்ருதிம் ப்ரூயுரபிஸந்திக்ருதே த்விஜ ॥'

என்று புத்திபூர்வகமென்பன்பதை அபிஸந்திபூர்வகமென்று விவரித்திருப்பதாலும், பாபமென்றுதெரிந்தாலும் ஸரி, தெரியாவிட்டாலும் ஸரி, பிறருடைய உபதேசத்தால்செய்தாலும் ஸரி, அன்றிக்கே ஸ்வபுத்தியால் செய்தாலும் ஸரி, ஒரு பாபத்தை நாம் இதைச்செய்யவேண்டுமென்கிற அபிஸந்தியோடு, அதாவது இச்சையோடு செய்தாளுகில், அது புத்திபூர்வகமென்றும் அப்படித் தன்னுடைய இச்சையன்றிக்கே விலக்கமுடியாத சோர ம்லேச்சாதி நிர்ப்பந்தத்தாலேயோ, தூக்கம் முதலான தசையிலேயோ செய்யப்படுமவையும் வேறு ஒன்றைச்செய்யவேண்டுமென்கிற அபிஸந்தியால் செய்யப்படும் வேருெரு பாபமும் இவைபோன்றனவும் அபுத்தி பூர்வகமென்றும் மஹர்ஷிகளின் நிர்ணயமென்று ஏற்படுகிறது. மாதவாதி ப்ராசீன நிபந்தந கர்த்தாக்களும்

1. ஜாம்பிதா: - சண்டாளாதிகள்.

இதை இப்படியே நன்றாய் விவரித்திருக்கிறார்கள். ஆகையால் மதாந்தரத்தில் ப்ரவேசிக்கவேண்டுமென்கிற அபிஸந்தியோடு அதாவது இச்சையோடு செய்யப்பட்ட ப்ரகிருத மதாந்தர ப்ரவேசரூப பாபமானது கொழுத்த புத்தி பூர்வகத்தில் சேருமேயொழிய அவனுக்கு இதில் பாபத்வஜ்ஞானமில்லை என்றாவது சாஸத்ரஜ்ஞானமில்லை என்றாவது ஸ்வயம் ஜ்ஞானமில்லை என்றாவது சொல்லி இதை அபுத்தி பூர்வகத்தில் சேர்க்க சாஸ்த்ரங்கள் எள்ளளவேனுமிடங்கொடுக்காது. புத்தி அபுத்தி என்பதை அந்தந்த கர்மங்களில், இதை செய்யவேண்டுமென்கிற அபிஸந்தி அநபிஸந்தி என்றே சாஸ்த்ரங்கள் சொல்லுகிறதேயொழிய வழியில் போகும் அபுத்தியையும் புத்தியையும் சொல்லவில்லை. அப்படியானால் எல்லாவற்றையும் புத்தி பூர்வகமாக்கிவிடலாம். இப்படி அந்தந்த கர்மத்தில் அபிஸந்த்யநபிஸந்திகளையே புத்தி சப்தமும் அபுத்திச் சப்தமும் சொல்லுகையால் தான் ப்ரபந்ந விஷயத்தில் உத்தராக ப்ராயசித்தத்தை விதிக்கிற,

'அஜ்ஞாநாத்யதி வா ஜ்ஞாநாத் பாபமேஷ ஸமாஸ்ருதி: ।
ப்ராயச்சித்தா க்ஷமேஷதி ப்ராயச்சித்தேந கேவலம் ॥'

என்கிற ச்லோகத்தில் அஜ்ஞாந சப்தத்தை பாபத்வாஜ்ஞாந பரமாக்கி பாபத்வாஜ்ஞாநத்தால் செய்யப்பட்டவையும் புத்திபூர்வகமாகையால் அதில் ப்ரபந்நனுக்கும் ப்ராயசித்தமுண்டென்று வ்யாக்யாதாக்கள் சொன்னது உபபன்னமாகிறது. மேலும்,

'அகாமத: க்ருதே பாபே ப்ராயச்சித்தம் விதுர்புதா: ।
காமகார க்ருதேப்யாஹுரேகே ச்ருதிநிதர்சநாத் ॥'

என்கிற மநுவசனத்தில் காமகாரமாகச் செய்யப்பட்ட பாபத்திற்கும் ப்ராயச்சித்தத்தை சிலர் சொல்லுகிறார்கள் என்றும், அதற்கு ச்ருதிதான் ப்ரமாணமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள ச்ருதிசப்தத்திற்கு வ்யாக்யாநம் பண்ணின குல்லூகபட்டார் (இந்த்ரோ யதீந் ஸாலாவ்ருகேப்ய: ப்ராயச்சத் ஸ ப்ரஜாபதிமுபாதாவத்) என்கிற ச்ருதிவாக்யத்தை அங்கு ப்ரமாணமாகக்காட்டியிருக்கிறார். அதினர்த்தம். ஸந்யாஸிகளின் தண்டனையில் பகவானால் நியமிக்கப்பட்ட இந்திரன், தப்புசெய்த ஸந்யாஸிகளை செந்நாய்களுக்கு இரையாக்கி அந்த தோஷ பரிஹாரார்த்தம் ப்ராஜாபதியினிடத்தில் சென்று ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டானென்பது. இதனால் ஒரு அதிகார பதவியிலுள்பட்டு அநிவார்யமாய் ஒரு பாபத்தைச் செய்தாலும் அதுவும் தன்னபிஸந்தியோடு செய்யப்பட்டபடியால் புத்தி பூர்வகமென்றே ஏற்படுகிறது. இப்படி அநிவார்யமாய் செய்யும்படி ஏற்பட்ட

1. இங்கு தசரத சப்தவேதனத்தை நினைக்கவும்.

பாபத்தையே புத்தி பூர்வகமென்று ஸ்ம்ருதிகளும், ஸ்ம்ருதிஜ்ஞர்களும் சொல்லாநிற்க, ஒருவன் கொண்டிதைர்யமாய் மதாந்தரத்தில் ப்ரவேசித்து தன் பத்நியையும் ப்ரவேசிப்பித்து அப்படியே வெகுகாலமிருந்து பின்பு அநுதாப பாவனையையோ அல்லது வாஸ்தவமாகவே அநுதாபத்தையோ அடைந்து ப்ராயச்சித்தம் கேழ்க்கவந்தால் வெகுகால மதாந்தர ப்ரவேசரூபமான அந்த பாபமானது பிறருடைய துர்போதனையால் நேர்ந்ததென்றும், ஆகையால் அது பலாத்கார கார்யத்தில் சேர்ந்ததென்றும் அபுத்தி பூர்வகமென்றும் ஏற்பாடு செய்து தர்மஜ்ஞர்கள் ப்ராயச்சித்தம் விதிப்பது ந்யாயமா என்பதை ப்ராமாணிகர்கள் பராமர்சிக்கவும்.

அதில் முதல் பக்ஷம் - பாபத்திற்கு இரண்டுவித சக்தியுண்டு. அதாவது, நரகத்தை உண்டுபண்ணுதல். இந்த லோகத்தில், ஸஹவாஸாத்யநர்ஹதையை யுண்டுபண்ணுதல், என்று. ப்ராயச்சித்தத்திற்கும் இரண்டு சக்தியுண்டு, அதாவது - பரலோகத்தில் நரகத்தைத் தடுப்பதல், இந்த லோகத்தில் ஸஹவாஸார்ஹதையை யுண்டுபண்ணுதலென்று. அதில், அபுத்தி பூர்வக பாபத்திற்கு ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டால், இரண்டு பலமும் ஸித்திக்கும். புத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டால் இந்த லோகத்தில் ஸஹவாஸயோக்யதை மாத்திரம் ஸித்திக்கும். ஆனால் புத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லை என்று சிலர் சொல்லுகிறார்களே என்னில் அந்த ரிஷிகளுக்கு நரக நிவ்ருத்தி ரூபமான ப்ரதான பலமில்லை என்பதில் தாத்பர்யம்.—என்பது.

2. இப்படி இது புத்தி பூர்வகமென்று ஏற்பட்டால் இனி புத்தி பூர்வக பாபத்திற்கு ப்ராயச்சித்தம் உண்டா இல்லையா என்பதை விசாரிக்க வேண்டும். இந்த விஷயத்தை தீக்ஷிதீய ப்ராயச்சித்த காண்டத்தில் காமாகாம கிருதபாப விசாரத்தில் வெகுவாக விசாரித்து, முடிவில், அகாமத்தால் செய்த பாபத்திற்கு ப்ராயச்சித்தமுண்டென்பதில் ஒரு மஹர்ஷிகளுக்கும் விவாதமில்லை. காமத்தால் செய்த பாபத்திற்கு, அதாவது அபிஸந்தியோடு செய்த பாபத்திற்கு, ப்ராயச்சித்தமே கிடையாதென்று சில ருஷிகள் சொல்லுகிறார்கள். சிலர் உண்டென்கிறார்கள். இப்படி ஒருவருக்கொருவர் விருத்தமாய் சொன்னால் எப்படி முடிவென்னில், இவ்விஷயத்தில் மாதவீயத்தில் மூன்றுவிதமான வ்யவஸ்தைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லி அடைவே அதுகளை உதாஹரித்திருக்கிறார்.

இரண்டாவது பக்ஷம். புத்தி பூர்வக பாபத்திற்கு ப்ராயச்சித்தம் பண்ணிக்கொண்டால், பரலோகத்தில் நரக நிவ்ருத்திமாத்திரம் ஸித்திக்குமேயொழிய இந்தலோகத்தில் ஸஹவாஸ யோக்யதை ஸித்திக்காது. புத்திபூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமே இல்லை என்று சில ருஷிகள் சொல்லுகிறார்களே என்னில், அவர்களுக்கு இந்த லோகத்தில் ஆவச்யகமான ஸஹவாஸார்ஹதை கிடையாதென்பதில் தாத்பர்யம் என்பது. இதுகளில்,

'ப்ராயச்சித்தைரபைத்யேநோ யதஜ்ஞாந க்ருதம் பவேத் ।
காமதோ வ்யவஹார்யஸ்து வசநாதிஹ ஜாயதே ॥'

என்கிற யாஜ்ஞவல்க்ய வசநத்தில் காமத: - வ்யவஹார்ய: - என்று பதத்தைப் பிரித்து முதல்பக்ஷம் ப்ரவர்த்தித்து காமத: அவ்யவஹார்ய: - என்று பதத்தைப் பிரித்து இரண்டாவது பக்ஷம் ப்ரவர்த்தித்து—இரண்டு க்ஷிக்கும் சில மன்வாதி வசநங்கள் உபபலமாய் இருக்கின்றன.

புத்தி பூர்வகபாபம் இரண்டுவிதம். பதநீயம் என்றும், அபதநீயம் என்றும். அதில் புத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லை என்கிற வசநங்களுக்கு, பதநீயமான புத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லை என்று தாத்பர்யம். ப்ராயச்சித்தமுண்டென்கிற வசநங்களுக்கு அபதநீயபுத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமுண்டென்று தாத்பர்யம் என்பதுதான் மூன்றாவது பக்ஷம். இந்த மூன்று பக்ஷந்தான் ந்யாயங்களுக்கும், அநுஷ்டாநங்களுக்கு மொத்தது, இந்த பக்ஷம்.

'அகாம க்ருதாநாம் ஸர்வேஷாம் பாபாநாம் ததுக்தம் ப்ராயச்சித்தம் விஹிதமேவ ஶோதயதி । காமக்ருதாநாஞ்ச பதநீய வ்யதிரிக்தாநாம் த்விகுணம் ப்ராயச்சித்தம் நரகநிவ்ருத்திர் விஹித வ்யவஹாரஸ்ச ஸித்யதி - தாஸ்விஸாமர்த்யே ப்ராயச்சித்தம் த்விதி வஸிஷ்டாதி ஸ்மரணம் பதநீயவிஷயம்' என்கிற தீக்ஷிதீய பங்க்திகளால் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. இந்த வாக்யத்தை வாஜபேயம் ஸ்வாமி 163-ம் பக்கத்திலெடுத்து வ்யாக்யாநம் பண்ணும்போது ப்ரும்மஹத்யாதி மஹா பாபங்கள் தவிர மற்ற பாபங்கள் விஷயத்தில் புத்தி பூர்வகங்களாய் இருந்தாலும் ப்ராயச்சித்தங்களால் நரகநிவிருத்திவ்யவஹாரார்ஹதைகள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது என்று எழுதுகிறார். மூலத்தில், 'பதநீய வ்யதிரிக்தாநாம்' என்றும், 'வஸிஷ்டாதி ஸ்மரணம் பதநீய விஷயம்' என்றுமிருக்க இந்த ஸ்வாமி மஹா பாபங்கள் தவிர என்று வ்யாக்யாநம் பண்ணி இருப்பதற்குக் காரணமென்? வாஸ்தவமாகவே இந்த ஸ்வாமி மஹா பாதகங்களே பதநீயங்கள், அதிபாதகாதிகள் பதநீயங்களன்று, என்று நினைத்திருக்கிறாரா? அல்லது ஸௌகிகபாமரவ்யாமோஹார்த்தம் அப்படி எழுதி இருக்கிறாரா என்பதை மத்யஸ்தர்கள் கொஞ்சமூன்றிப் பராமர்சிக்கவேண்டும். அப்படி பராமர்சித்தால், அதிபாதக கணனையில், 'ஊதத்யவித்ய யோநி ஸம்பந்தாஶ்ச ஸ்தேந நாஸ்திக நிந்தக கர்மாப்யாஸி பதித த்யாக்ய பதிதத்யாகிந: பதிதா: பாதக ஸம-

யோஜகாஶ்ச' என்று கௌதமர் எழுதி இருப்பதையும், 'அபதநீயாநி ஸம்வத்ஸராந்தம், ப்ரஹ்மஸூத்ராவஹரணம், ஸம்ஸ்ப்ருஷ்ட த்யவதநம் ஶம்ஸ்ப்ருஷ்டாஶிநாம், பஶ்ச ஸம்ஸ்ப்ருஷ்டாய ஶிஷ்யஜாயதே த்யவத்யம் ச தீதி' வைரயாயநர் சொல்லி இருப்பதையும், ப்ரஹ்ம ஸூத்ர த்ருதீயாத்யாயத்தின் நாலாம்பாதத்தில் 'தத்பூதஸ்ய து நாதத்பாவ:' என்று தொடங்கி நாலு ஸூத்ரங்களிலும், அதின் பாஷ்யங்களிலும் மஹாபாதகவ்யதிரிக்தமாக ஆச்ரமச்யவநத்தை பதநீயமென்றும், அதற்கு ப்ராயச்சித்தமில்லை என்றும், பண்ணிக்கொண்டாலும் நரகநிவ்ருத்தியே யொழிய இங்கு ஸம்வ்யவஹாரார்ஹதை இல்லை என்றும் ஸித்தாந்தம் செய்திருப்பதையும், நன்குணர்ந்த இந்த ஸ்வாமி பதநீய வ்யதிரிக்தாநாம் என்பதற்கு மஹாபாதகங்கள் தவிர என்று எழுதினது அஹ்ருதயமென்றே ஏற்படும். இந்த எண்ணங்கொண்டே இந்த ஸ்வாமி முதலிலேயே ஆகவே மதப்ரஷ்டனுக்கு அநுதாபமுண்டாகி விட்டால் அவனுக்கு நாஸ்திக புத்தியுண்டானதற்காகவும், வர்ணாச்ரம தர்மங்களை விட்டதற்காகவுமுள்ள ப்ராயச்சித்தங்களை செய்யவேண்டும் ஆகவே இந்த பாபத்தை மஹா பாபத்தில் சேர்க்கமுடியாதாகையால் அதிபாதக ஸமபாதக உபபாதகாதிகளில் ஏதாவது ஒன்றிலிதைச் சேர்க்கவேண்டி இருக்கிறது என்று பீடிகை வைத்து எழுதினர். அஹோ! மஹான்களுக்கும் அபிநிவேசம். இனிமேலே விசாரிப்போம். இப்படி அதிபாதகாதிகளிலும் பதநீயங்களுண்டென்றும் பதநீய வ்யதிரிக்தபுத்தி பூர்வகத்திற்கே ப்ராயச்சித்தமுண்டென்றும், பதநீயபுத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லை என்றும் செய்துகொண்டாலும், 'பஹிஸ்தூபயதாபி ஸ்ம்ருதேராசாராச்ச' என்கிற ஸூத்ரஸித்த ந்யாயப்படி நரக நிவ்ருத்தியுண்டே யொழிய ஸம்வ்யவஹாரார்ஹதை இல்லை என்றும் சாஸ்திரங்களில் ஏற்பட்டு அப்படியே நிபந்தனக்காரர்கள் நிச்சயித்திருந்தாலும், ப்ரக்ருத மதாந்தர ப்ரவேசரூப புத்தி பூர்வகபாபம் அதிபாதகாதிகளில் எதில் சேர்ந்தது? இது பதநீயமா அல்லது அபதநீயமா என்று விசாரிக்க வேண்டியதுதான் முக்ய விஷயம். இதை வாஜபேயம் ஸ்வாமி நாஸ்திக்யம், வர்ணாச்ரமத்யாகம் என்கிற இரண்டு பாபஸமுதாயமாக்கினர். அப்படி இவனை நாஸ்திகனாக வைத்து ப்ராயச்சித்தம் விதிப்போமென்றாலும், இவன் எந்த நாஸ்திகனில் சேர்ந்தவன் என்பதை முதலில் விசாரிக்கவேண்டும். கௌதமர், 'ஊதத்ய விஷ்யோநி ஸம்பந்தாச்ச ஸ்தேந நாஸ்திக நிந்தக கர்மாப்யாஸி பதித த்யாக்ய பதிதத்யாகிந: பதிதா: பாதக ஸம்யோஜகாஶ்ச' என்கிறஸூத்ரத்தில், நாஸ்திக்யத்தை அதிபாதகமாகவும் பதநீயமாகவும் படித்தார். யாஜ்ஞவல்க்யரும் மநுவும், 'நாஸ்தி

க்ஷ்யம் ப்ரதமோபஸ்ய ஸர்வதாநாம் ஏவ விக்ரய: - என்றும், 'ஸ்த்ரீஶூத்ர விட்க்ஷத்ர வதோ நாஸ்திக்யம் சோபபாதகம்' என்றும், நாஸ்திக்யத்தை உபபாதகமாகப் பேசினார்கள். 167-ம் பக்கத்தில், வாஜபேயம் ஸ்வாமி சொன்னபடி இதை ஸம பாதகமாயும் சிலர் நிர்வஹித்திருக்கிறார்கள். இது களில் மதப்ரஷ்டனுடைய நாஸ்திக்யம் எதில் சேர்ந்ததென்று விசாரித்தால், வாஜபேயம் ஸ்வாமி 168-ம் பக்கத்தில் அதற்கு ஸமபாதக தோஷமுண்டென்று சொல்லப்பட்டிருப்பதால் மதப்ரஷ்ட விஷயத்தை இதில் சேர்த்து என்கிற வளவால் முதலில் மதப்ரஷ்டதையை ஸமபாதகமாகப்பேசி மேல் இவ்விஷயத்தில், நாஸ்திக: க்ருச்ச்ரம் த்வாதஶராத்ரம் சரித்வா விரமேந்நாஸ்திக்யாத் - என்கிற வஸிஷ்ட ஸூத்ரமனுகூலமாயிருக்கும் என்று உபபாதகநாஸ்திக்யத்திற்கு வஸிஷ்டர்சொன்ன ப்ராயச்சித்தைச்சொல்லி வஞ்சித்து முடித்திருப்பதுபோலன்றிக்கே, ப்ராயச்சித்தார்ஹமாக நாஸ்திக்யத்திலே இது படிக்கப்பட்டிருக்கிறதென்பதை மேலுதாஹரிக்கும் திக்ஷிதீய பங்க்திகளையும் வசனங்களையும் கொண்டு ப்ராமணிகர்கள் நன்கு கவனிக்கவேண்டும். கீழும் மேலும், இதற்கு சேஷம் இதுதான் முக்கியமான விஷயம். அதாவது தீக்ஷிதீயத்தில், 'நாஸ்திக்ய ப்ராயஶ்சித்தமாஹ வஸிஷ்ட:' என்று ஆரம்பித்து, 'நாஸ்திக: க்ருச்ச்ரம் த்வாதஶராத்ரம் சரித்வா விரமேந்நாஸ்திக்யாத்' என்று வஸிஷ்டர் சொன்ன ப்ராயச்சித்தத்தைச் சொல்லி, மேல், 'தத் உபபாதக நாஸ்திக்ய விஷயம்' என்று வஸிஷ்டர் சொன்னதை உபபாதக நாஸ்திக்ய ப்ராயச்சித்தமாக முடித்து, மேல், 'பாதக நாஸ்திக்யே து ஶங்க: - நாஸ்திகோ நாஸ்திக வ்ருத்தி: க்ருதக்ந: கூடவ்யவஹாரீ மித்யாபிஶம்ஸீ சேத்யேதே பஞ்ச ஸம்வத்ஸரம் ப்ராஹ்மண க்ருஹே பைக்ஷம் சரேயு:' என்று அதிபாதக நாஸ்திக்யத்திற்கு ஶங்கர் சொன்ன பிக்ஷா சர்ய ரூபமாக ப்ராயச்சித்தத்தைச் சொல்லி அதற்குமேல் 'நாஸ்திக்ய [illegible]' என்றாரம்பித்து,

> நாஸ்திக ஸ்த்ரிய: [illegible] ।
> [illegible] ॥
> உபபாதக [illegible] பாதக: ।
> [illegible] மஹாபாதக உச்யதே ॥'

என்று இரண்டு ச்லோகங்கள்படிக்கப்பட்டிருக்கின்றதுகள். அதுகளில், மநதில் நாஸ்திக்யமன்றிக்கே இருக்க கேவலவாங் மாத்திரத்தாலே பரலோகமில்லை என்றும், வேதத்திற்கு ப்ரமாண்யமில்லை என்றும், சொல்லுகிற வாக் துஷ்ட நாஸ்திகன் உபபாதக நாஸ்திகனென்றும், வாயால் சொல்லுவதுமாத்திர

யத்ருச்சயாऽऽகதாம் தத்ர ததர்ஶ ப்ரமதோத்தமாம் ।
ப்ருத்யைர் தஶபிராயாந்தீம் ஏகைகஶதநாயகை: ॥ 20

பஞ்சஶீர்ஷாஹினா குப்தாம் ப்ரதீஹாரேண ஸர்வத: ।
அன்வேஷமாணாம் ருஷபம் அப்ரௌடாம் காமரூபிணீம் ॥ 21

ஸுநாஸாம் ஸுததீம் பாலாம் ஸுகபோலாம் வராநநாம் ।
ஸமவிந்யஸ்தகர்ணாப்யாம் பிப்ரதீம் குண்டலஶ்ரியம் ॥ 22

பிஶங்கநீவீம் ஸுஶ்ரோணீம் ஶ்யாமாம் கனகமேகலாம் ।
பத்ப்யாம் க்வணத்ப்யாம் சலந்தீம் நூபுரைர் தேவதாமிவ ॥ 23

ஸ்தநௌ வ்யஞ்ஜிதகைஶோரௌ ஸமவ்ருத்தௌ நிரந்தரௌ ।
வஸ்த்ராந்தேந நிகூஹந்தீம் வ்ரீடயா கஜகாமினீம் ॥ 24

[இதற்குமேல் ஐந்து ச்லோகங்களினால் அந்த உத்யான வனத்தில் வந்திருக்கிற ஒருஸ்திரீயைப் பார்த்தான் என்கிறார்.]

அந்த உத்யானவனத்தில் தான் எதிர்பாராமல் வந்தவளாயும், ஒவ்வொருவரும் தனித்தனியே அனேகம் பெயர்களுக்கும் யஜமானர்களாய் இருக்கிற பத்துவேலைக்காரர்களுடன் கூட வந்திருப்பவளாயும், ஐந்து தலையோடு கூடின ஸர்ப்பமாகிய வாசற்காவல்காரனால் காப்பாற்றப்பட்டவளாயும், ப்ரௌடையல்லாதவளாயும், இஷ்டப்ரகாரம் ரூபம் எடுத்துக்கொள்ளக்கூடியவளாயும், தனக்கு ஸத்ருசமான பர்த்தாவைத் தேடிக்கொண்டிருப்பவளாயும், அழகான மூக்கு, பற்கள், தாடைகள், முகம் இவைகளை உடையவளாயும், ஒன்றோடொன்று ஸரியான அளவை உடைய காதுகளினால் குண்டலங்களினுடைய அழகை வஹிப்பவளாயும், மஞ்சள் வர்ணமான வஸ்திர முடிச்சை உடையவளாயும், யௌவன வயதோடு கூடினவளாயும், ஸ்வர்ண்மான ஒட்டியாணத்தை உடையவளாயும், சிலம்புத்தண்டை முதலிய ஆபரணங்களினால் ஓசையுடன் கூடின கால்களினால் மெதுவாக நடந்து வருகிறவளாயும், அழகாயும், யௌவன வயதைத் தெரிவிக்கக்கூடியதாயும் இருக்கிற தன்னுடைய ஸ்தனங்களை வெட்கத்துடன் துணியினால் மறைத்துக்கொண்டிருப்பவளாயும், யானையைப்போல் கம்பீரமான நடையை உடையவளாயும் இருக்கிற அந்த உத்தமஸ்திரீயைப் பார்த்தான். 20—24

[ஸ்வா.] இங்கு 'ப்ரமதோத்தமாம்' என்றது ஜீவாத்மாவிற்கு மயக்கத்தை உண்டாக்கக்கூடிய புத்தியை. 'யத்ருச்சயாऽऽகதாம்' என்பதினால் புத்திக்கும் ஆத்மாவிற்கும் உள்ள ஸம்பந்தம் இன்னகாரணத்தினால் இன்ன ஸமயத்தில் உண்டானது என்று சொல்லமுடியாது, ஆதலால் நித்யமானது

तामाह ललितं वीरः सव्रीडस्मितशोभनाम् ।
स्निग्धेनापाङ्गपुङ्खेन स्पृष्टः प्रेमोद्भ्रमद्भ्रुवा ॥ 25

என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. மரம் முதலிய ஸ்தாவர ஜன்மங்களிலும் அது மிகவும் சுருக்கத்தை அடைந்திருக்கிறதேயொழிய முற்றிலும் இல்லாமல் போவது என்பதில்லை என்றபடி. (1) 'இந்த ஜீவாத்மாவினுடைய ஜ்ஞானத்திற்கு ஒருபொழுதும் அழிவில்லை என்று' ச்ருதிசொல்லியிருப்பது அறியத்தக்கது. 'तत्र' என்றது அந்த ஜ்ஞானம் இந்த ஸ்தூல தேஹத்தில் நின்றும் ஸூக்ஷ்மங்களோடும் வெளியில் புறப்பட்டு தூமாதி மார்க்கத்தில் சென்று அவரவர்கள் கர்மங்களுக்கு அநுகுணமாகப் பலங்களை அநுபவித்து மறுபடி அந்த சரீரத்தில் இருந்து வெளிக்கிளம்பி வரும்பொழுது இல்லாததுபோலவே மிகவும் சுருக்கத்தை அடைந்திருந்து மறுபடியும் தேஹத்தோடு சேர்ந்து பிறந்த பிறகு அந்தந்த தேஹங்களுக்குத்தக்கபடி கர்மாநுகுணமாக ப்ரகாசிக்கிற படியினால் இந்தப்புரம் என்று சொல்லப்படுகிற தேஹத்தோடு சேர்ந்தபிறகு புத்தியின் ப்ரகாசம் உண்டாயிற்று என்றபடி. 'स्रोतोभिः' என்றது ஜ்ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்களை. அவைகளை வேலைக்காரர்கள் என்றது. புத்தி அவைகள் விஷயமாக ஸுகதுக்கங்களை அநுபவிக்கவேண்டியிருப்பதினால். 'एकैकशतनायकैः' என்றது ஒவ்வொரு இந்திரியங்களுக்கும் அநேகம் வ்ருத்திகள் இருப்பதை இப்படிச்சொல்லியிருக்கிறது. வ்ருத்திகளாவது விஷயங்களோடு சேருதல். ஐந்து தலையையுடைய ஸர்ப்பமாவது ப்ராணவாயு. இந்த சரீரத்தில் ப்ராணன் இருக்கிறவரையில் புத்தியிருக்கிறது. அது இல்லாவிடில் புத்தி மிகவும் சுருக்கத்தை அடைந்துவிடுகிறது. 'अन्वेषमाणा ऋषभम्' தர்ம பூதஜ்ஞானம் குணமாகையினால் தனக்கு ஆதாரமான வஸ்துவில்லாமல் தன்னுடைய ஸ்வரூபமே நிலைக்காதாகையினால் பர்த்தாவைத் தேடிக்கொண்டு வருகிற என்றபடி. 'कामरूपिणीम्' என்றது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணங்களின் வ்ருத்திக் குறைவுகளுக்குத் தக்கபடி அநேக விதமான மாறுதல்களை அடைகிறது என்றபடி. மற்றவையெல்லாம் காவ்யத்தின் சிறப்புக்காகச் சொல்லி இருக்கிறது என்றறியத்தக்கது. 20—24

[மேல் இவ்விருவருக்கும் நடந்த ஸம்வாதத்தை நிரூபிக்கிறார்].

வெட்கத்தோடுகூடிய சிரிப்பினால் அழகு பொருந்தியவளான அந்த ஸ்திரீயைப்பார்த்து அவளுடைய ப்ரீதியுடன் கூடியதாயும், நெளித்த புருவத்தோடு கூடியதாயும், இருக்கிற கடைக்கண்ணாகிற பாணத்தினால் தொடப்பட்டவனாய் இந்தப் புருஷன் அவளைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான். 25

1. 'न विज्ञातुर्विज्ञातेर्विपरिलोपो विद्यते'

का त्वं कञ्जपलाशाक्षि कस्यासीह कुतः सति ।
इमामुप पुरीं भीरु किं चिकीर्षसि शंस मे ॥ 26

क एतेऽनुपथा ये त एकादश महाभटाः ।
एता वा ललनाः सुभ्रु कोऽयं तेऽहिः पुरःसरः ॥ 27

त्वं ह्रीर्भवान्यस्यथ वाग्रमा पतिं
विचिन्वती किं मुनिवद्रहो वने ।
त्वदङ्घ्रिकामाप्तसमस्तकामं क्व पद्मकोशः पतितः कराग्रात् ॥ 28

नासां वरोर्वन्यतमा भुविस्पृक् पुरीमिमां वीरवरेण साकम् ।
अर्हस्यलङ्कर्तुमदभ्रकर्मणा लोकं परं श्रीरिव यज्ञपुंसा ॥

यदेष मापाङ्गविखण्डितेन्द्रियं सव्रीडभावस्मितविभ्रमद्भ्रुवा ।
त्वयोपसृष्टो भगवान्मनोभवः
प्रबाधतेऽथानुगृहाण शोभने ॥ 30

त्वदाननं सुभ्रु सुतारलोचनं
व्यालम्बिनीलालकवृन्दसंवृतम् ।
उन्नीय मे दर्शय वल्गुवाचकं यद्व्रीडया नाभिमुखं शुचिस्मिते ॥

தாமரை இதழ்கள்போன்ற கண்களையுடைய ஸ்திரீயே! நீயார்? யாருடையவள்? எங்கிருந்து வந்தாய்? இந்தப்பட்டணத்தின் ஸமீபத்தில் இருக்கும் இடத்தைப்பார்த்து என்னசெய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்? அதை எனக்குச்சொல்லு. 26

உன்பின் தொடர்ந்து வந்திருக்கிற இந்தப் பதினொரு வேலைக்காரர்கள் யார்? இந்த ஸ்திரீகள் யார்? உனக்கு முன்செல்லுகிற இந்த ஸர்ப்பம் யார்? நீ அவரவர்களுடைய பர்த்தாக்களைத் தேடிக்கொண்டு வந்திருக்கிற ஹ்ரீ என்று சொல்லப்படுகிறவளா? பார்வதியா? அல்லது ஸரஸ்வதியா? அல்லது லக்ஷ்மியா? இந்தக்காட்டில் ஏகாந்தமாக ரிஷியைப்போல வஸித்துக்கொண்டு உன்னுடைய பாதங்களை ஆசைப்படுவதினாலேயே ஸர்வாபீஷ்டங்களையும் பெற்றவளாகிய தன்னுடைய பர்த்தாவைத்தேடிக் கொண்டு வந்திருக்கிற லக்ஷ்மியா? அப்படியாகில் தாமரைப்புஷ்பம் உன்கையில் இருந்து ஏன் நழுவி விழுந்துவிட்டது? நீ கீழ்க்குறித்தவர்களுக்குள் ஒருத்தியல்ல. ஏனெனில் பூமியைத்தொட்டுக்கொண்டு நடக்கிறபடியினால் தேவஸ்திரீகள் பூமியைத்தொடமாட்டார்களல்லவா. ஆதலால் உன் இஷ்டப்படி நடப்பவனாகிய சூரனாகிய என்னுடன் சேர்ந்து இந்தப் பட்டணத்தை யஜ்ஞபுருஷனாகிய நாராயணனோடு சேர்ந்து லக்ஷ்மீ வைகுண்ட லோகத்தை எப்படி அலங்கரிக்

नारद उवाच —
इत्थं पुरञ्जनं नारी याचमानमधीरवत् ।
अभ्यनन्दत तं वीरं हसन्ती वीर मोहिता ॥ 32
न विदाम वयं सम्यक्कर्तारं पुरुषर्षभ ।
आत्मनश्च परस्यापि गोत्रं नाम च यत्कृतम् ॥ 33
इहाद्य सन्तमात्मानं विदाम न ततः परम् ।
येनेयं निर्मिता वीर पुरी शरणमात्मनः ॥ 34

கிருளோ அப்படி அலங்கரிக்கவேண்டும். ஏனெனில் உன்னுடைய கடைக்கண் பார்வையினல் எனக்கு ஸ்வாதீனமில்லாமல் செய்யப்பட்ட இந்திரியங்களையுடைய என்னை வெட்கத்துடனும் ஆசையுடனும் கூடிய சிரிப்பையும் அசங்கிகொண்டிருக்கிற புருவங்களை உடையவளாயும் இருக்கிற உன்னல் வ்ருத்தி செய்யப்பட்ட மன்மதன் தொந்திரவு செய்கிறுனே, ஆதலால் என்னை அநுக்ரஹம் செய்யவேண்டும். அழகான புருவங்களோடு கூடியதாயும் அழகிய கருவிழிகளை உடைய கண்களோடு கூடியதாயும் தொங்கிக்கொண்டிக்கிற கருத்த மயிர்க்கூட்டங்களினல் மறைக்கப்படடிருக்கிறதாயும், அழகான பேச்சுக்களை உடையதாயும் இருக்கிற உன் முகத்தை உயரத்தூக்கி எனக்குக் காண்பி, எந்த முகம் வெட்கத்தினல் நேராக இதுவரையில் ப்ரகாசம் செய்யப்படவில்லையோ. 27—31

[நாரதர் சொல்லுகிறுர்.]

இப்படி தைர்யமில்லாமல் தன்னை ப்ரார்த்திக்கிற மஹானுகிய அந்தப் புரஞ்ஜனனைச் சிரித்துக்கொண்டு அவனிடத்தில் ஆசையையுடைய அந்த ஸ்திரீ பஹுமானம் செய்தாள். 32

[மேல் அந்த ஸ்த்ரீ பதில் சொல்லுவதை நிரூபிக்கிறுர்.]

நம்மையும் மற்றவர்களேயும் யார் உண்டாக்கிஞரோ, நமக்கு கோத்திரம் பெயர் எவரால் உண்டாக்கப்பட்டதோ, அவரையும், எவரால் நம் இருவருக்கும் இருப்பிடமாகிய இந்தப் பட்டணம் உண்டாக்கப்பட்டதோ, அப்படிப்பட்டவரையும் நாம் அறியவில்லை. இப்பொழுது இந்தப் பட்டணத்தில் இருக்கிற உன்னையும் என்னையும் தெரிந்துகொண்டிருக்கிறோம். நம் இருவரையும்விட மேல்பட்டவனுகிய ஒருவனை அறியவில்லை. 33-34

[ஸ்வா.] நம் இருவரையும் உண்டுபண்ணினவனுய், அதாவது ஜீவாத்மா முன்பு செய்த கர்மங்களை அநுஸரித்து அவனுக்கு தேஹ ஸம்பந்தத்தையும், அதற்கனுகுணமாகப் புத்தியின் சுருக்கம் முதலியவைகளையும், அதற்குள் தான் உள்ளே அநுப்ரவேசித்து, நாமரூபங்களை உண்டுபண்ணினவனையும், இப்பொழுது இந்தப் பட்டணத்தில் இருக்கிற நம்மைவிட மேலபட்டவனையும், நமக்கு இருப்பிடமாகிய இந்தத் தேஹமாகிற பட்டணத்தை

एते सखायः सख्यो मे नरा नार्यश्च मानद ।
सुप्तायां मयि जागर्ति नागोऽयं पालयन् पुरीम् ॥ 35
दिष्ट्याऽऽगतोऽसि भद्रं ते ग्राम्यान् कामानभीप्ससि ।
उद्वहिष्यामि तांस्तेऽहं स्वबन्धुभिररिन्दम ॥ 36

நமக்குக் கொடுத்தவனையும் இருக்கிற பரமாத்மாவை நாம் இருவரும் அறியவில்லை. இத்தால் புத்தி ஆத்மாவிற்கு உண்டாகும்பொழுதே முன்பு செய்த கர்மங்களுக்குத் தக்கபடி அஹங்காரமமகாரங்கள் உண்டாகி பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞானம் கொஞ்சமேனும் இல்லாமல் போகிறது என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 33-34

கூடவந்திருக்கிற இந்த ஸ்திரீகளும் புருஷர்களும் எனக்குத் தோழர்கள் இந்த ஸர்ப்பம் நான் தூங்குகிற ஸமயத்தில் இந்தப் பட்டணத்தை ரக்ஷித்துக்கொண்டு விழித்துக்கொண்டிருக்கிறது. 35

தைவாதீனமாக இங்குவந்தாய், உனக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும். இவ்வுலகத்தில் உண்டாகக்கூடிய ஸுகங்களை அநுபவிக்க ஆசைப்படுகிறுய். ஓ! ராஜாவே! உன்னை நான் என்னுடைய பந்துக்களைக் கொண்டு அந்த ஸுகங்களை அநுபவிக்கும்படி செய்கிறேன். 36

[ஸ்வா.] புத்தி ஸுகதுக்கங்களை அநுபவிக்கும்பொழுது இந்திரியங்களும் அதன் வ்ருத்திகளும் கூடவே இருக்கிறபடியினல் அவைகளை ஸ்நேஹிதர்கள் என்றது. ஸர்ப்பம் என்று சொல்லப்படுகிற ப்ராணவாயு புத்தி இல்லாத ஸுஷுப்தி மூர்ச்சை முதலிய தசைகளிலும் இந்த ஶரீரமாகிற பட்டணத்தைக் காப்பாற்றிக்கொண்டு தன்னுடைய வ்யாபாரங்களைச் செய்துகொண்டிருக்கிறது என்றபடி. 35

[ஸ்வா.] 'दिष्ट्याऽऽगतोऽसि' என்றதினல் அனேகம் செடி புல் பூண்டு முதலிய ஸ்தாவரங்களாயும், பசு மிருகம் பக்ஷி முதலிய திர்யக்குகளாயும் இருக்கிற ஜன்மங்களைக் கடந்து மனுஷ்ய ஜன்மம் வருகிறது மிகவும் ஶ்ரமமானது, அது அநேக ஜன்மங்களில் செய்யப்பட்ட ஸுக்ருதங்களின் பரிபாகத்தினல் வரத்தக்கது என்பது தெரிவிக்கப்பட்டது. (1) மனுஷ்யனுகப் பிறப்பது மிகவும் துர்லபம், என்றல்லவோ ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. भद्रं ते - இனி இந்த விசித்ரமான தேஹேந்திரியங்களையும் விவேகத்தையும் பகவான் விஷயத்தில் உபயோகப்படுத்தி அத்தால் உனக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும் என்றபடி. 'ग्राम्यान् कामान्' என்றது கண்முதலிய இந்திரியங்களின் கூட்டங்களினல் அநுபவிக்கத்தகுந்த ஸுகங்களை ஆசைப்படுகிறுய், உன்னை என்னுடைய ஸகிகளான அந்த இந்திரியங்களைக் கொண்டு ப்ரீதி அடையும்படி செய்கிறேன் என்றபடி. 36

(1) दुर्लभं हि सदा नृणां जन्म

𑌇𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌵 𑌪𑍁𑌰𑍀𑌂 𑌨𑌵𑌮𑍁𑌖𑍀𑌂 𑌵𑌿𑌭𑍋 ।
𑌮𑌯𑍋𑌪𑌨𑍀𑌤𑌾𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌨𑌃 𑌕𑌾𑌮𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌶𑌤𑌂 𑌸𑌮𑌾𑌃 ॥ 37

𑌕𑌂 𑌨𑍁 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌂 𑌰𑌮𑌯𑍇 𑌹𑍍𑌯𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌮𑌕𑍋𑌵𑌿𑌦𑌮𑍍 ।
𑌅𑌸𑌾𑌂𑌪𑌰𑌾𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌮𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌨𑌵𑌿𑌦𑌂 𑌪𑌶𑍁𑌮𑍍 ॥ 38

ஓ! மஹாராஜாவே! என்னால் உண்டாக்கப்படுகிற காம்ய ஸுகங்களை அனுபவித்துக்கொண்டு நூறு வருஷங்களில் ஒன்பது கோட்டை வாசலையுடைய இந்தப் பட்டணத்தை நீ அரசாளவேண்டும். 37

உன்னைவிட வேறானவனாய் விளையாடத் தெரியாதவனாய் ஸுகத்தை அறியாதவனாய் ஸ்வர்க்காதி ஸுகங்களில் ஆசை இல்லாதவனாய், நாளைக்கு வரப்போகிறது இன்னதென்று அறியாதவனாகிய பசுவைப்போன்ற எவனை நான் ஸந்தோஷப்படுத்தப்போகிறேன். 38

[ஸ்வா.] இந்தப் பட்டணம், நான், என்னுடைய ஸகிகள் இவைகள் எல்லாவற்றையும் உன் இஷ்டப்படி ஆளக்கூடிய ப்ரபுவே! என்னால் உண்டாக்கப்படுகிற காம்ய ஸுகங்களை அனுபவித்துக்கொண்டு அதாவது ஸுகம் துக்கம் முதலியவைகள் புத்தியின் அவஸ்தைகள், ஒரு வஸ்துவை ப்ரியமாக அனுபவித்தல் ஸுகம், மற்றொரு வஸ்துவை விரோதியாக அனுபவித்தல் துக்கம், ஆகையினால் போகமென்பது ஸுகதுக்கங்களை அனுபவிப்பதாகையினால் புத்தியின் அவஸ்தாபேதங்களை அனுபவித்து என்றபடி. நூறு வருஷங்கள் என்றது மனுஷ்ய ஜன்மம் இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதினால் மனுஷ்யனுக்கு வயது நூறு என்று ஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியினாலே அதை அனுஸரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்றபடி. பட்டணத்தை அரசாளவேண்டும் என்றது ஒன்பது த்வாரங்களுடன் கூடியதான இந்த ஶரீரத்தை அதிஷ்டானம் செய்யும் என்றபடி. இத்தால் (1) 'இந்த ஶரீரம் அழியக்கூடியது, ஜீவாத்மாவிற்கு அதிஷ்டானமாயிருக்கிறது' என்று ஶ்ருதியில் சொல்லியிருப்பது ஜ்ஞாபகப்படுத்தப்பட்டதாகிறது. 37

[தனக்கு அனுரூபனான நாயகன் என்பதை ஐந்து ஶ்லோகங்களில் நிரூபிக்கிறார்.]

[ஸ்வா.] ஸம்ஸாரியாகிய ஜீவாத்மா ப்ரவ்ருத்தி செய்வதையே ஸ்வபாவமாக உடையவனாதலால் நிவ்ருத்தி ஸம்ஸாரத்திக்கு விரோதியாதலால் அப்படி நிவ்ருத்தித்த புருஷனைத் தன்னுடை இப்படிப்பட்ட வ்யாபாரங்களினால் ஸந்தோஷப்படுத்த முடியாததாலும், இவன் தனக்கு வசப்படாதவனாகையாலும் அப்படிப்பட்ட நிவ்ருத்தனை நிந்திக்கிறார்கள். 𑌅𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌂 - ரதி

---

(1) 𑌮𑌘𑌵𑌨𑍍 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾 ।
𑌤𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 ॥

𑌧𑌰𑍍𑌮𑍋 𑌹𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑍌 𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌨𑍍𑌦𑍋𑌽𑌮𑍃𑌤𑌂 𑌯𑌶𑌃 ।
𑌲𑍋𑌕𑌾 𑌵𑌿𑌶𑍋𑌕𑌾 𑌵𑌿𑌰𑌜𑌾 𑌯𑌾𑌨𑍍𑌨 𑌕𑍇𑌵𑌲𑌿𑌨𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ 39

என்பது இன்னது என்பதைக் கொஞ்சம்கூட அறியாதவனாய். 𑌅𑌕𑍋𑌵𑌿𑌦𑌂 ஶாஸ்திரங்களில் நிஷேதிக்கப்படாத ஸுகத்தையும் த்யாகம் செய்தவனாய். 𑌅𑌸𑌾𑌂𑌪𑌰𑌾𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 - மரணத்தை எதிர்பாராதவனாய், அதாவது அதில் பயம் இல்லாதவனாய், அதாவது மரணம் வந்து நேரிடுமாகில் அப்புறம் இவ்விதமான ஸுகங்களை அனுபவிக்க இடமில்லையே என்று பயந்து ஸுகங்களை அனுபவிக்கவேண்டும் என்கிற ஆசை இல்லாதவனாய் என்றபடி. அன்றிக்கே மரணம் வந்தபிறகு அந்த ஸுகங்களை அனுபவிக்கவேண்டும் என்கிற ஆசை இல்லாமல் இங்கு இருக்கும்பொழுதே விரக்தனாய் அநந்யனாய் பகவானிடத்தில் பக்தியைச் செய்துகொண்டு 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும்வேண்டேன்' என்கிறபடியே இப்பொழுது செய்கிற அனுபவத்தையே மிகுந்த ஸுகமாக எண்ணி என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே யமனுக்கு எதிர்முகமாக இராதவர்களை, அதாவது 'வள்ளலே! உன் தமர்க்கென்றும் நமன்தமர் கள்ளர்போல்' என்கிறபடியே யமதூதர்கள் இவர்களைக் கண்டவுடன் திருடர்களைப்போல் ஒளித்தோடும்படி இருப்பவர்களை என்றாகவுமாம். இவர்களுடைய பெயரும் யமனுக்கு அஸஹ்யமாயிருக்கும். 'நமன்தமரால் ஆராயப்பட்டறியார் கண்டீர் அரவணைமேல் பேராயர்காட்பட்டார் பேர்' என்னப்பட்டதிறே. அதுவுமன்றிக்கே மரணம் வந்தால் அதற்குப் பயந்து அதைத் தடுக்கவேண்டும் என்று எதிர்த்து நிற்பவர்களன்றிக்கே (1) 'க்ருதக்ருத்யர்களான ஜனங்கள் மரணத்தை இஷ்டமான அதிதியைப்போல் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்' என்கிறபடியே ப்ரியமாய் எதிர்ப்பார்த்து நிற்குமவர்கள் என்றபடி. 𑌅𑌶𑍍𑌵𑌸𑍍𑌤𑌨𑌵𑌿𑌦𑌂 - இந்த ஜந்மத்திற்குப்பிறகு வரக்கூடிய ஸ்வர்க்காதி ஸுகங்களை ஸுகமாக எண்ணாதவனாய், (2) 'பகவானுடைய ஸ்தானத்திற்கு ப்ரும்மாதி ஸ்தானங்களும் நரக ப்ராயம் என்று சொல்லியிருக்கிறதே, அப்படியே ஒரு நாயகத்தின்படியே அவற்றை ஒரு ஸுகமாக நினைக்காதவர்கள் என்றபடி. 𑌪𑌶𑍁𑌂 - பசுவைப்போன்ற என்று நிந்தித்தபடி. இப்படிப்பட்டவனை நான் எப்படி த்ருப்தி பண்ணி வைப்பேன் என்றதாயிற்று. அவனை தன்னுடைய வேலைக்காரிகளான இந்திரியங்களினால் அனுபவிக்கக்கூடிய ஸுகங்களினால் த்ருப்தி பண்ணிவைக்க முடியாது என்றபடி. 38

[க்ருஹஸ்தாஶ்ரமமே விஶேஷம் என்று நிரூபிக்கிறார்.]

𑌯𑌜𑍍𑌞𑍈𑌃 - ஸ்வர்க்கம் முதலியவைகளுக்கு ஸாதனங்களான யாகம் முத

---

(1) 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌵𑌾𑌤𑌿𑌥𑌿𑌮𑍍 ॥
(2) 𑌤𑍇 𑌵𑍈 𑌨𑌿𑌰𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌤 𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।

பித்ருதேவர்ஷிமர்த்யாநாம் பூதாநாமாத்மநஶ்ச ஹ ।
க்ஷேம்யம் வதந்தி ஶரணம் பவேऽஸ்மிந் யத்க்ருஹாஶ்ரம: ॥ 40
கா நாம வீர விக்யாதம் வதாந்யம் ப்ரியதர்ஶநம் ।
ந வ்ருணீத ப்ரியம் ப்ராப்தம் மாத்ருஶீ த்வாத்ருஶம் பதிம் ॥ 41
கஸ்யா மநஸ்தே புவி போகிபோகயோ:
ஸ்த்ரியா ந ஸஜ்ஜேத் புஜயோர்மஹாபுஜ ।
யோऽநாதவர்காதிமலம் க்ருணோத்தத
ஹாஸாவலோகேந சரத்யபோஹிதும் ॥ 42

லியவைகள், அர்த்தம் - பொருள், காமம் - இன்பம், ப்ரஜாநந்த: - பிள்ளைகளைப் பெறுவதினால் உண்டாகும் ஸுகம், அம்ருதம் - மோக்ஷம், யஶ: - கீர்த்தி, விஶோகா: லோகா: - துக்கம் இல்லாத லோகங்கள், ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள் என்றபடி, விரஜா: - ரஜோகுணமில்லாத லோகங்கள், இவை எல்லாம், இந்த க்ரஹஸ்தாஶ்ரமத்திலேயே உண்டாகின்றன. 'எந்த லோகங்களை, கேவலிந: - மோக்ஷத்தை விரும்பிக்கொண்டு அதற்காக நிவ்ருத்தி தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டிருக்குமவர்கள், அவிது: - அறியமாட்டார்களோ, அப்படிப்பட்ட லோகங்களும் இதில் இருக்கின்றன என்றபடி. 39

பித்ருக்கள், தேவதைகள், ரிஷிகள், மனிதர்கள், மற்ற எல்லா ப்ராணிகள், தான், இவை எல்லாவற்றிற்கும் இந்த ஸம்ஸாரத்தில் க்ருஹஸ்தாஶ்ரமம் என்பதே க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதான ஆதாரம் என்று சொல்லுகிறார்கள், அதாவது ஶாஸ்திரங்களும் அதை அறிந்தவர்களும் சொல்லுகிறார்கள் என்றபடி. 40

[இப்படி க்ரஹஸ்தாச்ரமத்தை ஸ்தோத்திரம் செய்து அப்படி இருக்கும் பொழுது உன்னைப்போன்ற பர்த்தாவை அடைவது இன்னம் மேலான ஸுகம் என்கிறாள்.]

ஓ! மஹாராஜாவே! ப்ரஸித்தனும், ஔதார்ய குணமுள்ளவனும் அழகானவனும், தானே வந்து கிட்டினவனும் இருக்கிற உன்னைப்போன்ற பர்த்தாவை என்னைப்போன்ற எந்த ஸ்திரீ (அதாவது க்ருஹஸ்தாச்ரமத்தின் விசேஷங்களையும், பர்த்தாவின் குணங்களையும் பகுத்தறிந்த யுக்தவ்யதடைந்த எந்த ஸ்திரீ) வரிக்கமாட்டாள்? 41

ஓ! மஹாராஜாவே! ஸர்ப்பத்தின் உடலைப்போன்ற உம்முடைய கைகளில் எந்த ஸ்திரீயினுடைய மனது ஆசையுடையதாகாது? அதிகமான தயையை உடைய எந்த நீர் அநாதைகளுடைய கூட்டங்களின் துக்கத்தை உம்முடைய கடாக்ஷங்களினால் போக்குவதற்காக இந்த லோகத்தில ஸஞ்சரிக்கிறீரோ? அப்படிப்பட்ட 42

ஸுலக்ஷணவிஶேஷணயாரயிகா । அத்ர லக்ஷணோஷு
கேஷுசித் ஸ்வரோபாஹாஹ்வகேந ப்ராஹ்ய: । பிப்ரதேதி
க்வணந்தம் வேதவத்ய । ஸாத்வதர்ஷப:-அதிப:, பகவத்ஸேநாபத்ய
ஸமாராஹிதத்வம்: । யதா ஸாத்வஶப்தேந நித்யஸூரிபரி
ஷதுபலக்ஷிதா । தத்ர வர்த்ததி நிஷீததீதி ஸாத்வதர்ஷ: நித்யஸூ
ரிபரிஷந்நித்யர்த்தீர்த்த்யய: । க்ரியாபேக்ஷாயா ச ஸம்பதி
யோக்யக்ரியாத்யாஹார: । அத்ராயுதாநீதி பஹுவசந ப்ரதீ
தே கபிஞ்ஜலந்யாயேந த்ரித்வாரித்ர ஹளவிதேப்யி பஞ்சா
நாமாயுதாநாம விஶேஷேண ப்ரஸித்திப்ரகாஶாதிபஹு
ணாநாக்ரஹாத் பஞ்சேதி வ்யவஸ்தாப்யதே । இதம் ச ப
ஞ்சத்வவிஶேஷஸ்தாபநம் 'த்ரிஹாநாந்தே' இதி பூர்வோதாஹ்ருத
தேவி ஹாவ்ய । ஏவம் அபாம்பதிம் ஸமுத்ரம் ஸம்ப்ரா
ப்தோ நாபி கஸ்மிந் பகவச்சரீரதயா தத்ஹே: தத்தம்
ஶமேதோ ஜீவ: ஸம்ஸாரோத்திதீர்ஷயா பகவத: பஞ்சா

உண்டாகிய அடையாளமாய்த்தரித்து. மேலேசொல்லப்போகிற சிலஇடங்களில் ஸ்வ என்னும் ப்ரத்யயம் அனேகமாக வரும் என்கிற விதியினால் ஏற்பட்டது. 'பிப்ரதேவ' என்று க்வாப்ரத்யத்தை உடைய பதம் இது. ஸாத்வதர்ஷப:— அதிப:—பகவானுடைய ஸேனைக்குத் தலைவனாக ஆயிற்று என்றர்த்தம். அன்றிக்கே ஸத்வ என்னும் பதத்தினால் நித்யஸூரிகளுடைய திரள் சொல்லப்படுகிறது. அதில் இருக்கிறபடியினால் ஸாத்வதர்ஷப: - அதாவது நித்ய ஸூரிகளின் ஸபையில் இருப்பவனாக என்றர்த்தம். இதற்கு க்ரியாபதம் வேண்டியதாகையினால் அதற்குத் தகுந்ததான க்ரியாபதத்தை சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்விடத்தில் ஆயுதங்கள் என்று பஹுவசனமாகச் சொல்லியிருக்கிறபடியினால் கபிஞ்ஜலாதிகரணத்தில் சொல்லிய ந்யாயத்தின்படி மூன்று என்று சொல்லவேண்டியது உசிதமாயிருந்தபோதிலும் ஐந்து ஆயுதங்களும் துல்யமாக விசேஷமான ப்ரஸித்தியை உடையதாதலாலும், இந்த அர்த்தத்தை விவரிக்கிற வசனங்களின் ஒத்தாசை இருப்பதை அனுஸரித்தும் ஐந்து என்று ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த ஐந்து என்கிற கணக்கு இதற்கு முன் உதாஹரிக்கப்பட்ட வாக்யத்திலும் 'பகவானுடைய அடையாளங்களை' என்கிற வாக்யத்திலும் அறிந்துகொள்ளத்தக்கது. இப்படியே அபாம்பதிம் ஸம்ப்ராப்த:—ஸமுத்திரத்தை அடைந்திருக்கிற பகவானுக்கு மற்றொரு ஶரீரமாகையினால் அவனுடைய ஏகதேசமாகிய ஜீவாத்மாவும் ஸம்ஸாரத்தைவிட்டுக் கரையேற வேண்டும் என்கிற ஆசையினால் பகவானுடைய ஐந்து ஆயுதங்களையும் தரித்துக்கொண்டான். இவ்விடத்தில் 'அவ

[illegible]

(ஜலம்)'என்னும் பதம் மற்றப்பூதங்களையும் குறிக்கிறது. எப்படி என்னில்:— 'இப்படி ஐந்தாவது ஆஹுதியில் ஜலங்கள் புருஷன் என்கிற பெயரையுடையவைகளாக ஆகின்றன', 'முதலில் ஜலத்தையே ஸ்ருஷ்டித்தார்' என்றிவை முதலிய இடங்களிலே போல. ஶரீரமாக மாறியிருக்கிற அசேதன வஸ்துவின் என்றர்த்தம். அதின் மேல் இருக்கிற ஆறும் வேற்றுமை ஸம்பந்தத்தை அதாவது அசேதன வஸ்துவைச் சேர்ந்ததாகிய ஊர்மி என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற பசி முதலியவைகளையும் ஜன்மம் முதலிய விகாரத்தையும்சொல்லுகிறது. ஒருமையாகச் சொல்லி யிருப்பது அவைகளின் ஸமுதாயத்தைச் சொல்லுகிறது. **ஸமுத்ரம்**-மிகவும் வ்ருத்தி அடைந்திருக்கிற அன்றிக்கே ஸமுத்திரத்தை என்றர்த்தமாகவுமாம். அப்பொழுது அவைகளை உடையதாகையினால் '**ஊர்மி**' என்று ஔபசாரிகமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அசேதனவஸ்துக்களோடு சேர்ந்ததாய் அவைகளை உடையதாகிய ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை என்றர்த்தம். அன்றிக்கே '**ஸமுத்ரம் அபாமூர்மிம்**' என்பதற்கு மிகவும் வ்ருத்தி அடைந்த கர்ப்பத்தில் இருக்கும் ஜலங்களின் ஸமூஹத்தை என்றர்த்தமாகவுமாம். **ஸசராந:**— 'ஸச' என்கிற தாது சேர்ந்திருப்பதைச் சொல்லும்' என்றிருப்பதால் அதில் நுழைந்திருக்கிற, அதில் நடுவில் முழுகிக்கொண்டிருக்கிற என்றர்த்தம். இத்தால் துக்கம் நிறைந்ததான ஸம்ஸாரஸாகரத்தில் முழுகிக்கிடக்கிறபடியினால் அதைவிட்டுத் தாண்டவேண்டு மென்கிற ஆசையும் இருக்கிற தென்பது ஏற்பட்டது. **மஹிஷ:**—'மஹ' என்பது பூஜையைச் சொல்லும் என்கிற

[illegible]

தாதுவின்மேல் 'மஹி என்கிற தாதுவின் மேல் ஷ்டி ஷச் என்கிற விகுதி வரும்' என்கிறபடியே பூஜிக்கப்பட்ட என்றர்த்தம். ராஜாவின் அடையாளங்களைத் தரித்துக்கொண்டிருப்பவன் ராஜாவினாலும் உலகத்தாராலும் எப்படிப் பூஜிக்கப்படுகிறானோ அப்படியே இவனும் என்று தாத்பர்யம். மஹத் என்கிற பதத்தின் அர்த்தத்தையே சொல்லுகிறது மஹிஷ ஶப்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. **துரீயம் தாம** — நாலாவதாகிய தேஜஸ்ஸை. மூன்று வ்யூஹங்களைக் காட்டிலும் ஜாக்கிரதை முதலிய ஸ்தானங்களைக் காட்டிலுமாவது நாலாவதாகிய வாஸுதேவன் என்று பெயருடைய தேஜஸ்ஸை. அன்றிக்கே தாம என்கிற பதம் இடத்தைச் சொல்லுகிறதாகவுமாம். இத்தால் முக்தர்களால் அடையப்படக் கூடிய பரமபதம் சொல்லப்படுகிறது. **த்ரயம்** - கர்மங்களுக்கு வசப்பட்டவர்களினால் அடையக் கூடியதாகிய மூன்று இடங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகையினாலே எல்லா இடங்களையும் விட மேற்பட்டவனாகிய என்றர்த்தம். ஸம்ஸாரத்தில் அனுபவிக்கக் கூடியவைகளான எல்லாப் போகங்களையும் நிரூபித்து 'இவைகள் எல்லாம் பரமாத்மாவினுடைய ஸ்தானத்திற்கு நரகம்போன்றவைகள்' என்று மோக்ஷ தர்மத்திலே சொல்லப்பட்டது. **விவக்தி** - ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு அடைகிறான். தாதுக்கள் அனேகம் அர்த்தங்களை உடையவைகளாகையினால் இவ்விடத்தில் அந்வயிக்கக் கூடியதான அர்த்தம் சொல்லிக்கொள்ளத்தக்கது. அன்றிக்கே கோவிந்தனுடைய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு அதினாலேயே கீழ் நிரூபிக்கப்பட்ட [illegible]களைச் சொல்லுகிற சமூஷத் முதலிய ஏழு பதங்களினால் சொல்லப்படுகி[illegible]ண

க்தவிஶேஷாவஸிதே ஶுபேணவிபுஶிஷ்டஸ்தாநீயம் யாந்ததி ப்ராப்நோதீத்யேகவாக்யதா| ஸம்ஸாரநிவ்ருத்திபூர்வகசதுர்த்தஸ்தாநீய யாநப்ராப்திகாமோ பகவதாயுதாநி பிப்ருயாதிதிவாக்யார்த்த:|

அநயைவ ஸ்ருத்யா யாரணமாத்ரம் ப்ரதீயதே, நதுவேதந மிதி சேத், ந—‘அதிபுயமிறாக்ரமஸ்ய விஷ்ணோரங்கிதா லோகே ஸோஹமா ஹவேம தத்விஷ்ணோ: பரமம் பதம் யே மஹீஹ யாந்தி தா:’ இத்யாதர்வணே ப்ரத்யபிதாநாத்| உரு: - ப்ரஹ்ம்ந:, க்ரம: - அதிஷ்டாநம் யஸ்ய ஸ ததோக்த:, விஶ்வாந்தர்யாமீத்யர்த்த:| யத்வா த்ரிவிக்ரமாவதாரக்ருத: பதவிக்ஷேப ஏவ க்ரமஶப்தேந விவக்ஷித:| பத்யத இதி பதம், ப்ராப்யம் ஸ்தாநமிஹ விவக்ஷிதம்| நாஸ்ய ஸ்வரூபாதயபுகவம், வைபயிகரணஸாமஞ்ஜஸ்யம் பாயகாபாவாத், ஸ்தாநவிஶேஷஸ்யாபி ப்ராப்யத்வே பஹுஶ்ருதிஸத்பாவாச்ச| பரஶ

ங்களோடு சேர்ந்தவனாய் நாலாவது ஸ்தானத்தை அடைகிறான் என்று ஒரே வாக்யமாயிருக்கிறதாகவுமாம். ஸம்ஸாரத்தின் நிவ்ருத்தியை முன்னிட்டு நாலாவது ஸ்தானத்தை அடையவேண்டும் என்கிற ஆசை உடையவன் பகவானுடைய ஆயுதங்களைத் தரிக்கவேண்டும் என்று வாக்யத்திற்கு அர்த்தம்.

இப்படி இருந்தபோதிலும் கீழ்ச்சொல்லிய எல்லா வசனங்களிலும் தரிக்கவேண்டும் என்பது மாத்திரம் ஏற்படுகிறதே ஒழிய அடையாளம் செய்துகொள்ளவேண்டும் என்பது ஏற்படவில்லையே என்னில், அது உசிதமல்ல—‘நாம் உருக்ரமனாகிய பகவானுடைய சின்னங்களினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாய் லோகத்தில் க்ருத்தார்த்தர்களாகக்கடவோம், எவர்கள் இந்த லோகத்தில் (பகவானுடைய சின்னங்களினால்) அடையாளம் செய்யப்பட்டவர்களோ அவர்கள் அந்தப் பகவானுடைய உத்தமமான ஸ்தானத்தை அடைகிறார்கள்’ என்று அதர்வண வேதத்தில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருப்பதினால். உரு: - அதிகமான, க்ரம: - அதிஷ்டானம் செய்வதை உடையவன். அதாவது எல்லா வஸ்துக்களுக்கும் அந்தர்யாமி என்றர்த்தம். அன்றிக்கே த்ரிவிக்ரமாவதாரத்தில் செய்யப்பட்ட திருவடியை வைத்து அளந்ததே இங்கு க்ரம என்கிற பதத்தினால் சொல்லப்படுகிறதாகவுமாம். பத்யதே (அடையப்படுகிறது) என்கிற வ்யுத்பத்தியினால் பதம் என்பது அடையவேண்டிய ஸ்தானத்தைச் சொல்லுகிறது. இந்தப் பதம் என்கிற ஶப்தம் பகவானுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது என்பது உசிதமல்ல—பகவானுடைய என்று தனித்துச் சொல்லியிருப்பதி

ம அஸ்யாஶிதி பரமம்| ததிதி ஸ்வரூபாவிஷ்காராதி ப்ரஸித்த வைலக்ஷண்யாபிப்ராயம்| ததயமத்ரார்த்த:—யே யாத்ருஶா ஸ்தாத்ருஶா அபி உருக்ரமஸ்ய விஷ்ணோரங்கிதா லோகே தத் விஷ்ணோ: பரமம் பதம் யாந்தி, அதோ வயமப்யுருக்ரமஸ்ய சக்ராதிபிர் விஷ்ணோரங்கிதா ஸந்தோ பரமபதஶப்தாபிதேயே ஹ்யவலோகே பகவதோऽந்தரங்ககைங்கர்யதயா ஸோஹமா பஹூஹவேமேதி மோக்ஷகாமாநாமநுஸந்தாநம்| லோகஶப்தேநாஸ்ய தல்லோகவிஷயத்வம் வா| அஸ்மிந் லோகே ஶிஷ்டாதநீயா ஹவேமேத்யர்த்த:| யத்வா ஸோஹமா—பகவதாஶ்ரயணோபயிகாத்ருஷ்டவிஶேஷ ஶாஜ இத்யர்த்த:| தத்ரைவமங்கநலாஞ்சநஶப்தாப்யாம் விஶேஷதோ நிர்தேஶாத் தாரணாதிஶப்தஸ்ய ஸர்வத்ர அத்ர பர்யவஸிதத்வம், ஸாமாந்யஶப்தஸ்ய ஸமாநப்ரகரணோக்தவிஶேஷ

னாலே ஏற்பட்டதான பகவான் வேறு பதம் என்பது வேறு என்பதற்கு ஒருவித பாதகமு மில்லாமையினாலும், அந்த விசேஷமான ஸ்தானமும் அடையக்கூடியது என்கிற விஷயத்தில் அநேகம் ஶ்ருதிகள் இருக்கிறபடியினாலும். இந்த ஸ்தானத்தைவிட மேற்பட்ட ஸ்தானம் இல்லை என்கிற வ்யுத்பத்தியினால் ‘பரமம்’ என்னப்பட்டது. ‘தத்’ என்பது தன்னுடைய ஸ்வரூபம் ப்ரகாசிப்பது முதலிய ப்ரஸித்தமான மேன்மையை உடையது என்கிறஅபிப்ராயத்தினால் சொல்லப்பட்டது. ஆக அந்த வாக்யத்தின் அர்த்தம் இது-எப்படிப்பட்டவர்களாய்இருந்தபோதிலும்எவர்கள்பகவானுடையசின்னங்களினால் அடையாளம் செய்யப்பட்டவர்களோ அவர்கள் அப்படிப்பட்டதாகிய பகவானுடைய ஸ்தானத்தை அடைகிறார்கள், ஆதலால் நாமும் பகவானுடைய சக்ரம் முதலிய அடையாளங்களினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாய் அந்தப் பரமபதம் என்று சொல்லப்படுகிற பகவானுடைய லோகத்தில் பகவானுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்கிறபடியினால் பகவானுடைய ப்ரீதிக்குப் பாத்திரர்களாவோம் என்று மோக்ஷத்தை விரும்புகிறவர்களுடைய அநுஸந்தானம் இது. ‘லோகம்’ என்கிற பதம் இந்த லோகத்தைச் சொல்லுகிறதாகவுமாம். அப்பொழுது இந்த உலகத்தில் பெரியோர்களினால் கொண்டாடத்தக்கவர்களாக ஆகக்கடவோம் என்றர்த்தம். அன்றிக்கே ஸோஹமா:-பகவானை ஆஶ்ரயிப்பதற்குக் காரணமான அத்ருஷ்ட விஶேஷத்தை உடையவர்களாக என்றர்த்தமாகவுமாம். ஆக இப்படி அங்கனம் லாஞ்சனம் என்கிற பதங்களினால் விஶேஷித்துச் சொல்லப்பட்டிருப்பதினால் எல்லா இடத்திலும் இருக்கிற ‘தாரண’ என்கிற பதம் இந்த அங்கனத்திலேயே முடிவை அடைகின்றது—பொதுவான ஶப்தம் அதே ப்ரகரணத்தில் சொல்லப்படுகிற விஶேஷத்தில் முடிவை உடையது. என்பது ந்யாயத்தை அநுஸரித்த

பாபவிநாஶநஸ்ய ந்யாய்யத்வாத் | பரமபதப்ராப்திஸௌபாக்ய விஶேஷகாம: உருக்ரமஸ்ய பகவச்சிஹ்நைரங்கிதோ பவேதிதி விஹ்யர்த்த: |

நந்வத்ர தப்தைஶ்சிஹ்நநம் ந ப்ரதீயதே, ம்ருத்திகா சந்தநாத்யைரபி சிஹ்நநோபபத்தே:, ததா ச கேஷாஞ்சிதநுஷ்டாநாதிதி சேந்ந—'சக்ரம் பிபர்தி வபுஷாபிதப்தம்' இத்யாதி ருக்கிலவசநவையர்த்யாத் | தேவாநாம் பலம் ரக்ஷகமித்யர்த்த: | விஷ்ணோஶ்சக்ரமித்யந்வய: | நாகம்—அகம் து:கம், தத்ரஹிதம், பரமபதம் | துரிதம் விதூய துரிதாநி விதூயேத்யர்த்த: | அத்ர துரிதஶப்தேந ஸாம்ஸாரிக புண்யமபி ஸங்க்ருஹீதம் | 'நாஸ்ய ஸுக்ருதம் ந துஷ்க்ருதம்' இத்யுக்த்வா 'ஸர்வே பாப்மாநோऽதோ நிவர்த்தந்தே' இதி பாப்மஶப்தேநைவ ஸம்ஹாராத், 'தஸ்ய ச ஸுக்ருததுஷ்க்ருதே தூநுதே', 'புண்யபாபே விதூய' இத்யுபயோரபி நிவ்ருத்தி

தாகையினுல். பரமபதத்தை அடையவேண்டும் என்றும், அத்ருஷ்ட விசேஷத்தை அடையவேண்டும் என்றும் ஆசையை உடையவன் பகவானுடைய சின்னங்களினுல் அடையாளம் செய்யப்பட்டவனுக இருக்கவேண்டும் என்று விதிவாக்யத்தின் அர்த்தம்.

இவ்விடத்தில் தாபம் செய்யப்பட்ட அந்த ஆயுதங்களினுல் அடையாளம் செய்துகொள்ள வேண்டும் என்பது ஏற்படவில்லையே, மண் சந்தனம் முதலியவைகளினுல் பூசப்பட்ட சக்கரம் முதலியவைகளினுல் அங்கனம் செய்துகொள்வதும் கூடுமாதலாலும், அப்படியே சிலரால் அனுஷ்டிக்கப்படுவதினுலும் என்பதும் உசிதமல்ல—'தாபம் செய்யப்பட்ட சக்கரத்தைத் தன்னுடைய ஶரீரத்தினுல் தரிக்கிறுன்' என்றிவை முதலிய ருக்வேத கிலத்தில் சொல்லப்படுகிற வசனம் ப்ரயோஜன மற்றதாகுமாதலால். **தேவாநாம்**—தேவதைகளுக்கு, **பலம்**—பலமான, அதாவது காப்பாற்றக் கூடியதான என்றர்த்தம். பகவானுடைய சக்ரத்தை என்றந்வயம். **நாகம்** - அகம் என்பது துக்கம், அது இல்லாத பரமபதத்தை என்றபடி. **துரிதம் விதூய**—பாபங்களைப் போக்கடித்து என்றர்த்தம். இவ்விடத்தில் '**துரித**' என்னும் பதத்தினுல் ஸம்ஸாரத்தை வ்ருத்தி செய்யக் கூடிய புண்யமும் சேர்த்துச் சொல்லப்பட்டது. 'புண்யமும் இல்லை, பாபமும் இல்லை' என்று சொல்லிவிட்டு 'எல்லாப் பாபங்களும் இவனிடத்தில் இருந்து நிவ்ருத்தி அடைகின்றன' என்று பாபம் என்கிற பதத்தினுல் புண்யத்தையும்

ஶ்ருதே: | அத்ர 'ப்ரயாந்தி யத்யதயோ வீதராகா:' இதி முக்தப்ராப்யஸ்யைவ ப்ரதீதே: அத்ர விதிஸ்ஸாபல: |

நந்வேததபி தப்தகாஞ்சநநிர்மிதஸுதர்ஶநதாரணே பர்யவஸிதம் | யதோக்தம் ஜ்யோதிஷே, ப்ருஹஸ்பதிநா முஹூர்த்தவிதாநே—'ஜாதஸ்ய து குமாரஸ்ய தாரயேச்ச பஞ்சமேऽஹநி | சக்ரம் க்ருத்வா ஸுவர்ணேந ஷடரம் மந்த்ரஸம்யுதம் ||' இதி | ஸங்க்ரஹே—'ஜாதஸ்ய பஞ்சமதிநே ஶுபதே முஹூர்த்தே பஞ்சாயுதாபரணதாரணமிஷ்டமாஹு: | நாபிப்ரதேஶபரிலம்பி ஸுவர்ணஸூத்ர ப்ரோதம் பிஶாசஶமநஸஹயந்த்ர நிவாரணகைஶ்ச யுக்தம் ||' இதி | 'க்ருதசக்ரதாரீ' இதி வசநாந்தரமபி ததா ஸத்யாநுகுண்யமிதி சேந்ந—'நேமிநா தப்ததநுர் ப்ரஹ்மண: ஸாயுஜ்யம் ஸலோகதாஞ்சாப்நோதி'

சேர்த்து முடித்திருக்கிறபடியினுல். முக்தனுக்கு 'அவன் புண்யபாபங்களைப் போக்கடிக்கிறுன்' என்றும், 'புண்யம்பாபம் இவைகளைப் போக்கடித்துவிட்டு' என்றும், 'புண்யம் பாபம் இரண்டும் நிவ்ருத்தி அடைகின்றன' என்றும் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினுல். இவ்விடத்தில் '**ப்ரயாந்தி யத்யதயோ வீதராகா:**' என்பதினுல் முக்தர்களினுல் அடையப்படுகிற ஸ்தானமே சொல்லப்படுகிறபடியினுல் இந்த வாக்யத்தில் விதிஸாலபமாய் அறியத்தக்கது.

இந்த வசனமும் நன்றாக புடம் போடப்பட்ட ஸ்வர்ணம் முதலியவைகளினுல் செய்யப்பட்ட சக்கரத்தைத் தரிப்பதில் தாத்பர்யத்தை உடையது. அப்படியே ஜ்யோதிஷ ஶாஸ்திரத்தில் ப்ருஹஸ்பதியினுல் சொல்லப்பட்ட முஹூர்த்தவிதானத்தில் 'பிறந்த குழந்தைக்கு ஐந்தாவது நாளில் தங்கத்தினுல் ஆறு இதழோடு கூடிய சக்கரத்தைச் செய்து மந்திரத்துடன் தரிக்கும்படி செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸங்க்ரஹமும் 'பிறந்த குழந்தை ஐந்தாவது நாளில் ஶுபத்தை உண்டாக்கக்கூடிய நல்ல முகூர்த்தத்தில் தொப்புள் வரையில் தொங்குகிற ஸ்வர்ணமயமான கயிற்றில் கோர்க்கப்பட்டதாயும் மற்ற பிசாசம் முதலியதைத் தடுக்கக்கூடிய யந்திரம் முதலியவைகளோடு கூடியதாயும் இருக்கிற பஞ்சாயுதங்களாகிற ஆபரணங்களைத் தரிக்கும்படி செய்வது இஷ்டமானது என்று சொல்லுகிறுர்கள்' என்று சொல்லப்படுகிறது. 'செய்யப்பட்ட சக்கரத்தைத் தரித்துக்கொண்டிருப்பவன்' என்கிற மற்றொரு வசனமும் இப்படியாகில் ஒற்றுமையாயிருக்கிறது என்பதும் உசிதமல்ல—'சக்கரத்தினுல் தாபம் செய்யப்பட்ட ஶரீரத்தை உடையவன் பரப்ரும்மத்தின் ஸாயுஜ்யத்தையும் ஸாலோக்யத்தையும் அடை

இதி ஸாமவேதோபநிஷதேகாயநச்ருதௌ, 'க்ருதவக்ஷயாமீ' இத்யத்ராபி ஸ்ரீவத்ஸஸ்ய அவச்யம்பாவாபிதாநாத் ஸதா தாரணம் ப்ரதீயதே | தஸ்யாச்சிஹ்நத்வேநைவோபபந்நத்வாத், காஞ்சநாதி நிர்மிதஸ்ய ஆபரணாந்தரவதேவ ஸதாதாரணாஸம்பவாத் | அத ஏவ க்ருதசப்தேந ஸ்ம்ருதிவிஹிதப்ரதிஷ்டாராதநாதிஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதத்வம் விவக்ஷிதம் | 'ப்ரஹ்மண: ஸாயுஜ்யம்' இதி ஸாயுஜ்யம் ஸமாநபோகாதியுக்தத்வம், 'பரமம் ஸாம்யமுபைதி' இதி ச்ருதே: | 'மம ஸாதர்ம்யமாகதா: | ஸர்கேऽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ||' இதி ஸ்ம்ருதேச்ச | ஸூத்ரம் ச 'போகமாத்ரஸாம்யலிங்காச்ச' இதி | ஸாலோக்யாதித்ரயஸ்யாபி ப்ரஹ்மஸாயுஜ்யாந்தர்கதத்வஜ்ஞாபநாய ஸாலோக்யாதிகதநம் | தேவதாந்தரப்ராப்தௌ ஹி ஸாலோக்யாதிபேதாவாப்தி: | யதா பகவத்ப்ராப்தாவபி ஸ்ரீவிஷ்ணுலோகாதிஷு த்வாரபாலாதிஷ்விவ ததாவித பேதோக்தி தத்வே

கிறான்' என்று ஸாமவேதோபநிஷத்தில் சொல்லி இருக்கிற அர்த்தத்தைச் சொல்லவேண்டியதாகையினாலும், 'க்ருதவக்ஷயாமீ' என்கிற இடத்தில் ஸ்ரீவத்ஸம் அவச்யம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினாலும், எப்பொழுதும் தரிக்கவேண்டும் என்பது ஏற்படுகிறது. அது அடையாளமாக இருக்கும் பக்ஷத்தில் பொருத்தமுடையதாக இருக்கிறது. ஸ்வர்ணம் முதலியவைகளினால் செய்யப்பட்டது மற்ற ஆபரணங்களைப்போலவே ஸதா தரிக்கக்கூடியதாகாது. ஆதலால் 'க்ருத' என்னும் பதத்தினால் ஸ்ம்ருதிகளில் ஏற்பட்டபடி ப்ரதிஷ்டை, ஆராதனம் முதலியவற்றால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட என்பது சொல்லப்படுகிறது. 'பரப்ரும்மத்தின் ஸாயுஜ்யத்தை' என்கிற இடத்தில் ஸாயுஜ்யமாவது ஸமான போகத்தை உடையவனாயிருக்கை. 'மிகுந்த ஸாம்யத்தை அடைகிறான்' என்று ஶ்ருதியில் சொல்லி இருப்பதினாலும், 'எனக்கு ஸமமான ஸ்வபாவத்தை அடைந்தவர்களாய் ஸ்ருஷ்டிகாலத்தில் பிறப்பதில்லை ப்ரளயகாலத்தில் நாசமடைகிறதுமில்லை' என்று கீதையில் சொல்லப்பட்டிருப்பதினாலும். 'போகம் மாத்திரம் (பகவானுக்கு) ஸமமாக இருக்கிற என்கிற அடையாளத்தினாலும் (ஜகத்வ்யாபாரம் இல்லை)' என்று ஸூத்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸாலோக்யம் முதலிய மற்ற மூன்றும் பரமாத்மாவின் ஸாயுஜ்யத்திற்குள் அடங்கியது என்று தெரிவிப்பதற்காக இங்கு ஸாலோக்யத்தைச் சொல்லி இருக்கிறது. மற்ற தேவதைகளை அடையும்போதல்லவோ ஸாலோக்யம் முதலிய பேதம் உண்டு. அன்றிக்கே பகவானை அடைவதிலும் விஷ்ணுலோகம் மு[illegible]லும் த்வாரபாலகனாயிருக்கை முதலியவைகளிலும் அந்த ஸாலோக்யம் மு[illegible]த்யாஸம் உண்டு, அதை விரும்புகிறவர்களு

186739 Chennai-600 005.

ராவ்ஸாஹிப் டில்லி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்.

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் வரவர தாழ்மையான நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதைக்கண்டு வருந்தி அதை எப்படியாவது முன்னுக்கு கொண்டுவரவேண்டுமென்ற ஆவலுள்ள, ருவ்ஸாஹேப் டில்லி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவ கிராமங்களில் பண்டிதர்களை அனுப்பி உபன்யாஸம் செய்யும்படி செய்தால், தான் பொருள் உதவி செய்வதாக வாக்களித்து, சென்ற நான்கு வருஷகாலமாக திரவிய ஸஹாயம் செய்து வருகிறார். இவ்வருஷமும் இந்த ஸ்வாமியுடைய ஸகாயத்தால் கும்பகோணமுதல் மாயவரம் வரையிலுள்ள பிரஸித்தமான பத்து ஸ்ரீ வைஷ்ணவ அக்ரஹாரங்களில் நெடுங்தெரு, வித்வான் ஸ்ரீ உ. வே. ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமியையும், தஞ்சாவூர், நாகப்பட்டணம், பட்டுக்கோட்டை முதலிய பத்து ஸ்ரீ வைஷ்ணவ அக்ரஹாரங்களில், வித்வான். காடங்கேத்தி ஸ்ரீ உ. வே. கோபாலாசாரியர் ஸ்வாமியையும் உபந்யாஸம் செய்யும்படி சபையால் பிரார்த்திக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு ஸ்வாமிகளும் கூடிய சீக்கிரத்தில் உபந்யாஸங்களை ஆரம்பிப்பார்கள்.

இந்த டில்லி ஸ்வாமி தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்தவரானதால் தன்னுடைய கைங்கரியத்தை தஞ்சாவூர் ஜில்லாவிலேயே நடத்திவைக்க வேண்டுமென்று அபிப்ராயப்படுகிற படியால் தஞ்சாவூர் ஜில்லாவிலேயே இந்த உபந்யாஸங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இதுபோல் மற்ற ஜில்லாக்களிலும் நடந்தால் வைஷ்ணவ ஸமூஹத்திற்கு மிகவும் இது உபகாரமாயிருக்கும். ஸபைக்கு ஏராளமான மூலதனமிருந்தால் பிறரை அபேக்ஷிக்காமல் உபந்யாஸங்களை இஷ்டமான இடங்களில் நடத்தலாம். அப்படிக்கு இல்லாததால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ப்ரமுகர்களான பிரபுக்கள் திரவிய ஸஹாயம் செய்தால் உபந்யாஸங்களை நடத்தலாம். பகவானால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட திரவியத்திற்கும் நல்ல விநியோகம் ஏற்படும். பகவானையே நம்பி ஸம்ஸ்கிருத பாஷையை அப்யஸித்து காலக்ஷேபாதிகள் செய்திருக்கும் வித்வான்களுக்கும் ஜீவிகையும் உண்டாகும். ‘ திஷ்டா நந்தி தரெ ஜநா: ’ என்னுமாப்போல் மற்ற மற்ற ஜனங்களுக்கும் காதுக்கு இனிமையும், புத்திக்கு விகாஸமும், ஸத்வோந்மேஷமும் உண்டாகும்.

இந்த பிரார்த்தனையை காதில் படும்படி செய்து பொருள் உதவும்படி பகவான் ஆஸ்திக தனவான்களுக்கு அனுக்ரஹம் செய்யவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

ரா. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.

காரியதரிசி.

Ready for Sale.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

1. வேதாந்த தீபிகை பழய ஸஞ்சிகைகள் வாலியூம் 1-க்கு-12 ஸஞ்சிகைகளுக்கு.	3	0	0
பைண்டு வாலியூம்.	3	8	0
2. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ. உ.ப. இஞ்ஜிமேடு ரெங்கநாத சாரியருடைய வ்யாக்யானத்துடன்.	0	4	0
3. ஸ்ரீ விசிஷ்டாத்வைத தத்வம்.	0	3	0
4. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். ஸ்ரீ. உ.ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசாரியர் வ்யாக்யானத்துடன்	6	8	0
5. ஸ்ரீரஹஸ்யத்ரயஸார ஸங்க்ரஹம்.	0	8	0
6. ஜகத்தினி—ஸ்ரீ. உ. ப. தி. தி. ரங்காசார்யரால் செய்யப்பட்டது.	1	0	0
7. மும்மணிக்கோவை—ஸ்ரீ. உ. ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் வ்யாக்யானத்துடன்.	0	8	0
8. கற்புநிலை (பாதிவ்ரத்யம்) ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசார்யரால் செய்யப்பட்டது.	0	2	0
9. விவாஹஸாரஸ்யம்—ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசாரியாரால் செய்யப்பட்டது.	0	4	0

[ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் தேவநாகர எழுத்தில்.]

10. ந்யாய பரிசுத்தி	3	0	0
11. கத்யத்ரயம், ஸ்ரீ தேசிகன் பாஷ்யத்துடன்.	1	0	0

இவைகளை மேற் குறிக்கப்பட்டுள்ள விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

The Secretary,
Sri Vaishnava Siddhanta Sabha,
2/11, Adiappa Mudaly Street, Purasawalkam,
Vepery Post, (MADRAS N. C.)

Published by the Secretary, Sri Vaishnava Siddhanta Sabha,
Purasawalkam, Madras.